Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 042 | வியாழக்கிழமை | மார்கழி 22 ஆம் நாள் 07 ஜனவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

## வவுனியா முடக்கநிலை ஓரளவு சுமுகமாகியது!!

வவுனியா, ஜன. 7
வவுனியாவில் கொரோனாப் பெருந்தொற்றுக் காரண மாக நேற்றுக் காலை 19 ➤

## கொரோனா சாவு 219 ஆக அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 7
இலங்கையில் கொரோனாத் தாக்கத்தால் மேலும் 19 ➤



## கோத்தாபய – ஜெய்சங்கர் மூடிய அறைக்குள் பேச்சு

*தீர்வு விடயத்துக்கு இந்தியா முதலிடம்*

கொழும்பு, ஜன. 7
இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை, ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். மூடிய அறைக்குள் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. 19 ➤



## ஆஸிக்கு திரும்ப அசாஞ்சேக்கு தடையில்லை

*பிரதமர் மொறிசன் அறிவிப்பு*

கான்பரா, ஜன. 7
விக்கி லீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சேயை நாடுகடத்தும் அமெரிக்காவின் முயற்சி பிரிட்டன் நீதிமன்றத்தில் தோல்வி அடைந்ததால் அவர் தடையின்றி நாடு திரும்ப முடியும் என்று ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மொறிசன் தெரிவித்துள்ளார்.
அசாஞ்சே மீதான உளவு பார்த்த குற்றச்சாட்டைக் கைவிடும்படி ஆஸ்திரேலிய நாடாளுமன்றம் அமெரிக்காவை கேட்டுக்கொண்டுள்ளது. எனினும் இந்தத் தீர்ப்புக்கு எதிராக 19 ➤

## 3 தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒன்றுபட்டு வரைவு தயாரிப்பு!

*கொழும்புக் கூட்டத்தில் முடிவு என்கிறார் மாவை*

கொழும்பு, ஜன. 7
எதிர்வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ள இலங்கையின் பொறுப்புக்கூறலை வலியுறுத்திய புதிய பிரேரணையில் இருக்க வேண்டிய 17 ➤

# அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வே தமிழர்களுக்கு வழங்கவேண்டும்!

## '13' தொடர்பில் இந்தியா விடாப்பிடி!

கொழும்பு, ஜனவரி 7
ஒருமித்த நாட்டுக்குள் தமிழ் மக்களின் அபிலாஷைகளான நீதி, சமாதானம், சமத்துவம் மற்றும் கௌரவம் உள்ளடங்கலான தீர்வைப் பெற்றுக்கொடுப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும். அதுமாத்திரமன்றி, அரசமைப்பின் 13ஆவது திருத்தம் உள்ளடங்கலாக அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கத்தை நடைமுறைப்படுத்துவதற்கான கடப்பாட்டையும் அரசு நிறைவேற்ற வேண்டும். இது இலங்கையின் நலன்களுக்கு உகந்ததாகும் இவ்வாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார். 19 ➤



## எருக்கலம்பிட்டியும் தற்காலிக முடக்கம்

*46 குடும்பங்கள் இதுவரை தனிமை*

மன்னார், ஜன. 6
மன்னார் எருக்கலம்பிட்டி கிராமத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேருக்கு கொரோனா உறுதிசெய்யப்பட்ட நிலையில், மன்னார் எருக்கலம்பிட்டி கிராமம் நேற்றுக் காலை முதல் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளது என்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார். 19 ➤

## யாழ்ப்பாண மாவட்டத்தில் 42 ஆயிரம் வாக்காளர்கள் 'அவுட்!'

யாழ்ப்பாணம், ஜன. 7
2020 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 42 ஆயிரத்து 234 பேர் நீக்கப்படவுள்ளனர். இவர்களின் விவரங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள் ளன. வலி. வடக்கில் மீள்குடியமர்வுக்கு 17 ➤

## தொற்றாளர் 46,000 நேற்று 522

கொழும்பு, ஜன. 7
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண் 17 ➤

## இலங்கை இனப்படுகொலைக்குத் தீர்வு சர்வதேச சுயாதீனப் பொறிமுறையே!

*பிரிட்டனில் 250 தமிழ் அமைப்புக்கள் ஒருமித்து வலியுறுத்து*

கொழும்பு, ஜன. 7
நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது அமர்வில் இலங்கை தொடர்பாக, ஐ.ஐ.ஐ.எம் என அழைக்கப்படும் சர்வதேச சுயாதீன புலனாய்வுப் பொறிமுறையை உருவாக்குவதற்கான தீர்மானம் ஒன்றைக் கொண்டுவருமாறு பிரிட்டன் அரசிடம் 250க்கும் மேற்பட்ட புலம்பெயர் தமிழர் 17 ➤

## வெளிநாடுகளில் வசிப்பவர்கள் வாக்காளராக பதிய சந்தர்ப்பம்

யாழ்ப்பாணம், ஜன. 7
மீளக்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படாத கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் தற்போது வெளிநாடுகளில் வசித்தால் அவர்கள் தம்மை வாக்காளர்களாகப் பதிவுசெய்துகொள்ள முடியும் என்று தேர்தல்கள் ஆணைக் 17 ➤

# அரசமைப்புப் பலவீனத்தால் சர்வதேசப் பிரச்சினைகள்!

**அதன் உருவாக்கத்தில் சகல எம்.பிக்களும் தேவை என வலியுறுத்துகின்றார் எதிர்க்கட்சிப் பிரதம கொறடா**

கொழும்பு, ஜன. 7

**அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில், நாட்டில் அரசமைப்பு இல்லாமையே சர்வதேச பிரச்சினைகள் ஏற்படுவதற்குக் காரணம் என்று எதிர்க்கட்சி பிரதம கொறட லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.**

அரசமைப்பு உருவாக்கத்தை சர்வதேசம் உன்னிப்பாக அவதானிக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றில்-நீதி அமைச்சின் கீழ் உள்ள தண்டனைச்சட்டக் கோவை, பிணை மற்றும் சான்று (திருத்தச்) சட்டவரைவு மீதான நேற்றைய விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு சுதந்திரமடைந்த பின்னர் இரண்டு அரசமைப்பைத் தயாரித்தோம். அதன்போது சிறுபான்மைக் கட்சிகள் கலந்துகொள்ளவில்லை. குறிப்பாக தமிழ்க் கட்சிகள் கலந்துகொள்ளவில்லை. அதனால்தான் இந்த இரண்டு யாப்புகளுக்கும் விமர்சனங்கள் வந்தன.

அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலான அரசமைப்பைத் தயாரிப்பதாக இருந்தால், அனைத்து இன மக்களையும் பிரதிநிதித்துவப்படும் வகையில் குழுவொன்றை அமைத்து அரசமைப்பைத் தயாரிக்கவேண்டும்.

நல்லாட்சி அரசில் புதிய அரசமைப்புத் தயாரிப்புக்காக முழு நாடாளுமன்றையும் அரசமைப்புச் சபையாக நாங்கள் ஏற்படுத்தினோம். நாடாளுமன்றில் 20 குழுக்களை அமைத்தோம். அந்த 20 குழுக்களாலும் 20 அறிக்கைகளை சமர்ப்பித்திருந்தோம். அரசமைப்பு இடைக்கால அறிக்கை ஒன்றைத் தயாரித்து நாடாளுமன்றுக்குச் சமர்ப்பித்தோம். நாடாளுமன்றில் 90வீதமானவர்கள் அதற்கு ஆதரவாக இருந்தனர். புதிய அரசமைப்புத் தயாரிக்கப்பட்டு முடியும் தறுவாயிலே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது.

எனவே அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளும் வகையிலே அரசமைப்பு தயாரிக்கப்படவேண்டும். அவ்வாறு இல்லாமல் தங்களுக்கு நெருக்கமான சட்டத்தரணிகளை மாத்திரம் இணைத்துக்கொண்டு அரசமைப்பைத் தயாரித்தால், முன்னர் இருந்த அரசமைப்புகளுக்கு ஏற்பட்ட நிலையே இதற்கும் ஏற்படும்.

அதனால் சர்வதேசத்தை வெற்றிகொள்ளக்கூடிய அரசமைப்பு ஒன்றைத் தயாரிப்பதாக இருந்தால், முழு நாடாளுமன்றப் பிரதிநிதிகளையும் இணைத்துக்கொண்டு மேற்கொள்ளவேண்டும். என்றார். (தஇ)

யாழ்.கல்லுண்டாயில்

## வீடுகளின் ஓடுகளை கழற்றிய சுழல் காற்று



யாழ்ப்பாணம், ஜன. 7

யாழ்ப்பாணம் கல்லுண்டாயில் நேற்றுமாலை வீசிய சுழல் காற்றால் 9 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்தன. 12 குடும்பங்களைச் சேர்ந்த 41பேர் பாதிக்கப்பட்டு உள்ளனர் என்று யாழ்ப்பாண மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் சூரியராஜ் தெரிவித்தார்.

அதன்போது ஓடுகள் தூக்கி வீசப்பட்டன. தகர வேலிகளும் பிடுங்கப்பட்டன என்று மக்கள் தெரிவித்தனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கல்லுண்டாய் ஜே.36 நவாலி தெற்கு கிராம அலுவலர் பிரிவில் இது இடம்பெற்றது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கூரைவிரிப்புகள் வழங்கப்பட்டன என்று உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார். (து111.7)

## மீட்கப்பட்டன குண்டுகள்

வவுனியா, ஜன. 7

வவுனியா முதிரங்குளம் பகுதியில் ஆர்.வி.ஜி. குண்டு மற்றும் கைக்குண்டு என்பன நேற்று மீட்கப்பட்டன என்று கனகராயன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் குறித்த பகுதியை சோதனையிட்டு மேற்குறித்த வெடிபொருள்களை மீட்டனர்.

நீதிமன்ற அனுமதியுடன் அவை அழிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (து110)

## கொரோனாத் தொற்றில்லாதபோதும் சடலத்தை கையளிக்காது இழுத்தடிப்பு

*மருத்துவமனைப் பணிப்பாளருக்கு வழக்கு*
*பி.சி.ஆர். சமர்ப்பிக்க நீதிமன்று கட்டளை*

கல்முனை, ஜன. 7

கொரோனாத் தொற்றால் இறந்தார் என்று கூறப்பட்டவருக்கு கொரோனா இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அது பற்றிய அறிக்கையை மருத்துவமனைப் பணிப்பாளர் வழங்காது, சடலத்தையும் வழங்காதுள்ளார் என்று குற்றஞ்சாட்டிய உறவுகள், அது பற்றி நீதிகோரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

அதனையடுத்து மருத்துவ அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி நீதிமன்று மருத்துவமனைப் பணிப்பாளருக்கு கட்டளை பிறப்பித்துள்ளது.

கடந்த 21ஆம் திகதி நீரிழிவு நோய்த் தாக்கமுள்ள ஒருவர் சிகிச்சைக்காக கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிறிது நேரத்திலேயே உயிரிழந்துவிட்டார். அவரது உடல் அன்டிஜென் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது கொவிட் தொற்று இருப்பதாகக் கூறப்பட்டது. அதை உறுதிப்படுத்த பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. கொரோனாத் தொற்று இல்லை என்று தெரிய வந்தது.

அந்த மருத்துவ அறிக்கை மருத்துவமனை அத்தியட்சகருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவருடைய குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்கு பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனைகள் மேற்கொள்ளுமாறு மருத்துவ அறிக்கையில் மருத்துவர் பரிந்துரைத்திருந்தார். அதன்படி இறந்தவரின் உறவினர்கள், தொடர்புடையவர்கள் என 125 பேருக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், எவருக்கும் தொற்றில்லை என்று உறுதிப்படுத்தப்பட்டது.

இந்தநிலையில்,சடலத்தை வழங்குமாறு பணிப்பாளரிடம் கேட்டபோது "மேலும் ஒரு குழுவினருடன் கலந்தாலோசிக்க வேண்டியுள்ளது" என்று கூறி சடலத்தை வழங்கவில்லை என்றும் எழுத்துமூல கேள்விக்குப் பதிலளிக்காமல் உள்ளார் என்றும் கூறிய உறவுகள், தமக்கு நீதி பெற்றுத்தருமாறு கோரி கல்முனை நீதிவான் மன்றில் நேற்று வழக்குத் தாக்கல் செய்தன.

இலங்கை தண்டனை சட்டக்கோவையின் பிரிவு 162 இன் கீழ் தனிப்பட்ட பிராதான சட்டத்தரணி மூலமாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அதனைப் பரிசீலித்த நீதிமன்று, சடலம் பற்றிய பி.சி.ஆர். அறிக்கையை நாளை வெள்ளிக்கிழமை அல்லது அதற்கு முன்னர் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்குமாறு கட்டளை பிறப்பித்தது. (தஇ)

## முல்லை. அளம்பிலில் வெடிபொருள்கள் மீட்பு

முல்லைத்தீவு, ஜன. 7

முல்லைத்தீவு அளம்பில் வடக்கு '50 ஏக்கர்' பகுதியில் தனியார் காணியில் வெடிபொருள்கள் நேற்று மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியில் போரின்போது வெடிபொருள்கள் புதைக்கப்பட்டுள்ளன. என்று புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய நிலம் தோண்டி வெடிபொருள்கள் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

கைக்குண்டு, மோட்டார் குண்டு மற்றும் ஆர்.பி.ஜி. குண்டு ஒன்றின் பாகம் என்பனவே மீட்கப்பட்டன. நீதிமன்ற உத்தரவின் பின்னர் அவை அழிக்கப்படும் என்று முல்லைத்தீவுப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (து-19)

## மூடப்பட்டன நோயாளர் விடுதிகள்

கொழும்பு, ஜன. 7

இரத்தினபுரி மருத்துவமனையில் 5 நோயாளர் விடுதிகள் கொரோனா அச்சம் காரணமாக மூடப்பட்டுள்ளன என்று இரத்தினபுரி மாநகர பிரதி மேயர் லக்ஸ்மன் முனசிங்க தெரிவித்தார்.

6,13,14,15 மற்றும் 24 ஆகிய விடுதிகளே மூடப்பட்டன. அங்கு பலருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளன என்றும் அதனால் 5 விடுதிகளும் மூடப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (தஇ)

## விபத்தில் காயமடைந்த சிறுமிக்கு கொரோனா!

கொழும்பு, ஜன. 7

விபத்தில் காயமடைந்து பதுளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த மூன்று வயதுச் சிறுமிக்கு கொரோனாத்தொற்று உள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

பாணந்துறையிலிருந்து சென்றவர்கள் பயணித்த வாகனம் ஹல்துமுல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் விபத்துக்குள்ளானது. அதில் காயமடைந்த 8 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன்போதே சிறுமிக்கு கொரோன்ாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

இதனையடுத்து அந்தச் சிறுமி சேர்க்கப்பட்டிருந்த 10 ஆம் இலக்க விடுதி தற்காலிகமாக மூடப்பட்டது. அந்த நோயாளர் விடுதியில் பணியாற்றிய ஊழியர்கள் அவரவர்களின் வீடுகளில் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (தஇ)

*அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி*

## சர்வமத வழிபாடு நாளை

யாழ்ப்பாணம், ஜன. 7

குரலற்றவர்களின் குரல் அமைப்பால், 'ஒன்றுபட்டு எமது உறவுகளை சிறை மீட்போம்' என்னும் தொனிப்பொருளில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் சர்வமத வழிபாடு இன்று காலை 10 மணிக்கு நாவலர் வீதியில் உள்ள தியாகி அறக்கொடை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பௌத்த இஸ்லாமிய கிறிஸ்த்தவ சைவ சமயத் தரப்பினரை இணைத்து கூட்டு வழிபாடு மேற்கொள்வதன் ஊடாக ஆன்மீக ரீதியில் எமது உறவுகளின் விடுதலைக்கு வலிமை சேர்க்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்த சர்வமத வழிபாட்டில், சர்வமத பிரதிநிதிகள் மற்றும் அரசியல் கைதிகளின் குடும்பத்தார் பங்குபற்றவுள்ளனர். (ஒ)

## புறநகரில் கோழிகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஜன. 7

யாழ்ப்பாணம் புறநகர் பகுதிகளான கொட்டடி மற்றும் நாவாந்துறை பகுதிகளில் அண்மைக் காலமாக கோழிகள் களவாடப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் இரவும் ஒரு வீட்டில் வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்பட்ட 10க்கும் மேற்பட்ட கோழிகள் களவாடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (துரி1)

# கொழும்புத்துறைமுக முனையம்: வெளிநாடுகளுக்கு வழங்கப்படவில்லை

## ஜெய்சங்கர் கொழும்பில் நிற்கத்தக்கதாக பிரதமர் மஹிந்த தெரிவிப்பு

**கொழும்பு, ஜன. 7**

**கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் முகாமைத்துவம், உரிமை அல்லது பகுதியள விலான உரிமையை வெளிநாட்டு நிறுவனத்துக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கவில்லை என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**



இந்தியாவின் வெளிவிகார அமைச்சர் ஜெய்சங்கர் இரு நாள் பயணமாக இலங்கைக்கு வந்துள்ள நிலையிலேயே இவ்வாறானதொரு நிலைப்பாடு அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் அநுரகுமார திசாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த பிரதமர், கொழும்பு துறைமுகம் நாட்டின் வளர்ச்சிக்கு ஒரு முக்கிய மையமாகும் என்று கூறினார்.

கிழக்கு முனையம் குறித்து துறைமுகங்கள் மற்றும் கடற்படை விவகார அமைச்சுடன் தொடர்பு கொள்ளாமல் கடந்த நல்லாட்சி அரசு ஒரு ஒப்பந்தத்தை செய்துள்ளது எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

இந்தியா மற்றும் ஜப்பானுடனும் அப்போதைய அரசு ஒரு உடன்பாட்டை எட்டியது எனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச குறிப்பிட்டார். (ஒ.இ)

# நாடாளுமன்றக் குழுவில் இரா.சாணக்கியன்

கொழும்பு, ஜன.7

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் நாடாளுமன்றத்தில் மற்றுமொரு ஆலோசனைக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவால் இந்த புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த குழுவானது நாட்டின் அபிவிருத்தியிலும் வளர்ச்சியிலும் பங்குகொள்ளும் முகவர் நிறுவனங்களினது நடவடிக்கைகளை கண்காணிக்கும் ஆலோசனைக் குழுவாகும் இதன் முதல் கூட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளது. யு.என்.டி.பி. யு.எஸ்.எய்ட், என்.டி.ஐ. ஐ.ஆர்.ஐ மற்றும் டபிள்யூ.எப். ஆகிய நிறுவனங்களின் நடவடிக்கைகளே இக் குழுவால் கண்காணிக்கப்படுகின்றன. (ந)



# நாலக எதிரிசிங்க சி.ஐ.டியிடம் சரண்!

கொழும்பு, ஜன.7

ஈ.ரீ.ஐ. மற்றும் சுவர்ணமஹால் நிறுவனத்தின் நிதி முறைகேடுகள் தொடர்பான வழக்கின் நான்காவது சந்தேக நபரான நாலக எதிரிசிங்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்றுக் காலை சரணடைந்த நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சட்டமா அதிபர் தப்புல டிலிவேராவின் உத்தரவுக்கு அமைவாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்றைய தினம் ஈ.ரீ.ஐ. மற்றும் சுவர்ண மஹால் நிறுவனத்தின் பணிப்பாளர்களாக செயற்பட்ட ஜீவக எதிரிசிங்க, அஞ்சலி தீபா எதிரிசிங்க, அசங்க ஆகியோரைக் கைதுசெய்திருந்தனர். இந் நிலையில் குறித்த வழக்கு விசாரணை தொடர்பில் கைதான நால்வரும் நேற்று கோட்டை நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

13.7 மில்லியன் ரூபா பணத்தை சட்டவிரோதமாக பெற்றுக்கொண்டமை உள்ளிட்ட நிதி முறைகேடு தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் பரிந்துரைக்கு அமைய இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பாளர் நிஷார ஜயரத்ன தெரிவித்துள்ளார். (ந-இ)

# சுற்றுலாவிகள் விதி மீறினால் முகவர்கள் மீது சட்டம் பாயும்

## சுற்றுலாத்துறை அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, ஜன.7

இலங்கைக்கு வருகை தரும் போது சுற்றுலாப் பயணிகள் சுகாதார வழிகாட்டுதல்களை மீறினால் அவர்களை அழைத்து வரும் பயண முகவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.



பரீட்சார்த்த திட்டம் ஒன்றின் கீழ் கடந்த மாதம் இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளை அழைத்து வருமாறு கோரிக்கை விடுக்கப் பட்டது. இதன்படி உக்ரேனிய சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அனுப்ப மூன்று பயண முகவர் நிறுவனங்கள் ஒப்புக் கொண்டன. இந்நிலையில் அவர்கள் சுகாதார வழிகாட்டுதல்களை மீறினால் எதிர்காலத்தில் பயண முகவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார். (வ-இ)

# தரச்சான்றிதழ் பெற்ற பின்னரா பானம் அருந்தினார் சபாநாயகர் ?

கொழும்பு, ஜன.7

கேகாலை ஆயுர்வேத மருத்துவரின் மருந்தை சபாநாயகர் பயன்படுத்துவதற்கு முன்னர் தரச்சான்றிதழ் அதற்கு வழங்கப்பட்டதா என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பியுள்ளார்.

சுகாதார அதிகாரிகளின் அங்கீகாரமில்லாமல் மருந்துகளைப் பயன்படுத்துவது அதனைப் பயன்படுத்துபவர்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம். இது வேடிக்கையல்ல என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (வ-இ)

# இரு வகையினருக்கும் ஒரே விதிகள் இல்லை

## அமைச்சர் பிரசன்ன விளக்கம்

கொழும்பு, ஜன.7

வெளிநாட்டுப் பணியாளர்கள் மற்றும் சுற்றுலாப்பயணிகள் ஆகிய இரு வகையினருக்கும் ஒரே சுகாதார விதிமுறைகளை விதிக்க முடியாது என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நாடாளுமன்றில் நேற்றுத் தெரிவித்தார்.

சுற்றுலாப் பயணிகள் தெரிவுசெய்யப்பட்ட இடங்களுக்கு குழுக்களாக மட்டுமே பயணிப்பர்.

இதேவேளை வெளிநாட்டுப் பணியாளர்கள் இங்கு வந்த பின் சமூகத்தில் ஒருங்கிணைக்கப்படுவர். வெளிநாட்டுப் பணியாளர்களுக்கான சுகாதார கட்டுப்பாடு விதிமுறைகள் மேலும் நீடிக்கப்படும் என்றும் அவை சமூகத்துக்கு அச்சுறுத்தலாக இல்லை என்பதைக் கண்டறிய மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

# டிஜிட்டல் மயமாகின்றன காணிப் பதிவுகள்

கொழும்பு, ஜன.7

காணிப் பதிவு நடவடிக்கைகள் அனைத்தும் டிஜிட்டல் மயமாக்கப்பட்டு வருகின்றன.

இதன் முதலாவது நடவடிக்கை கொழும்பு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த வருட இறுதிக்குள் நாடளாவிய ரீதியில் காணிகளைப் பதிவு செய்யும் 45 அலுவலகங்களில் இந்த சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (ச-இ)



# மாஸ்க் அணியாத 14 பேருக்கு தொற்று

## அஜித் ரோஹண தெரிவிப்பு

கொழும்பு, ஜன.7

மேல் மாகாணத்தில் முகக்கவசம் அணியத்தவறிய 550 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட கொரோனா பரிசோதனைகளில் 14 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

முகக்கவசம் அணியாதவர்களைக் கைது செய்து வழக்குத் தொடர்வதற்கு மேலதிகமாக அவர்களை பி.சி.ஆர். மற்றும் உடனடி அன்டிஜென் பரிசோதனைக்கு உட்படுத்தும் நடைமுறை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டது.

அதன்படி, 550 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட உடனடி அன்டிஜென் பரிசோதனையில் 14 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (வஇ)

# அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா கிடைக்குமா?

## கூட்டு ஒப்பந்த பேச்சு இன்று

**கொழும்பு, ஜன. 7**
**பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் உட்பட இதர நலன்புரி விடயங்களை நிர்ணயிக்கின்ற கூட்டு ஒப்பந்தம் தொடர்பான பேச்சு இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.**

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் இந்த தகவலை நேற்று "உதயனிடம்" உறுதிப்படுத்தினார்.

தொழில் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தலைமையில் நடைபெறவுள்ள கூட்டு ஒப்பந்தப் பேச்சில், ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும், முதலாளிமார் சம்மேளனத்தின் பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர். தமக்கான அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா அவசியம் என பெருந்தோட்டத் தொழிலாளர்கள் வலியுறுத்திவருகின்றனர். எனினும், இந்தக் கோரிக்கையை ஏற்பதற்கு முதலாளிமார் சம்மேளனம் மறுப்பு தெரிவித்து வருகின்றது. பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தற்போது அடிப்படை நாள் சம்பளமாக 700 ரூபாவை பெறும் நிலையில், அதனை 750 ரூபாவரை அதிகரிப்பதே கம்பனிகளின் எதிர்பார்ப்பு. தொழிற்சங்கங்களும் இழுத்தடிப்பு செய்துவருகின்றன. இந்நிலையிலேயே இன்று தீர்க்கமான சந்திப்பு நடைபெறவுள்ளது-என்றார். (ஒ.44)

## விரிவுபடுத்தப்படும் சிகிச்சை நிலையங்கள்

கொழும்பு, ஜன. 7
ஆயுள்வேத வைத்தியசாலைகளை கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான கொரோனா சிகிச்சை நிலையங்களாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.
நாவின்ன ஆயுள்வேத வைத்தியசாலையை கேந்திரமாகக் கொண்டு அதன் முதற்கட்ட நடவடிக்கைகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது என சுதேச வைத்திய மேம்பாடு மற்றும் ஆயுள்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்தார். (ஒ.இ)

## சந்திப்பு



கொழும்பு, ஜன.7
இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கொமொடோர் முஹம்மட் ஷபிஉல் பாரி பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்னவை நேற்றுமுன்தினம் சந்தித்தார். இந்த சந்திப்பில் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பாக சினேகபூர்வ கலந்துரையாடல் இடம்பெற்றது. இதில் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் பங்களாதேஷ் பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோருக்கிடையில் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)



## பிரதமரின் கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் நியமனம்

கொழும்பு, ஜன.7
பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளராக ஏ.எம்.டி.எச்.தனசிறி அமரதுங்க நியமிக்கப்பட்டார். பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து அவருக்கான நியமனம் வழங்கப்பட்டது. இவர் தெஹிவளை கல்கிஸ மாநகர சபையின் முன்னாள் மேயராக பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## துமிந்த சில்வாவுக்கு மன்னிப்பு வேண்டும்

*ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு என்கிறார் எஸ்.பி திஸாநாயக்க*



கொழும்பு, ஜன.7
சிறைக்கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு எனத் தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க, மரண தண்டனைக் கைதியான, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்பு வழங்குவது சிறந்தது எனத் தெரிவித்துள்ளார்.
மேலும், கொவிட்19 தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்கள் தகனம் செய்யப்படுமென விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டு நடைமுறையில் உள்ளது.
எனவே தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் உடல்களைத் தகனம் செய்வதா, அடக்கம் செய்வதா என்பது தொடர்பில், தீர்மானிக்க வேண்டிய தேவை, அரசாங்கத்துக்குக் கிடையாது.
கொவிட்19 தொற்றுக்கு மத்தியில், சுகாதாரத் தரப்பினரது தீர்மானங்களுக்கே முக்கியத்துவம் வழங்க வேண்டும் என, மதத் தலைவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.
இவ்வாறான நிலையில், அரசாங்கம் சுகாதாரத் தரப்பினரது தீர்மானத்துக்கே முன்னுரிமை வழங்கும். எனவே நாட்டு மக்கள் அனைவரும் இதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.- என்றார். (ந-இ)

## நாட்டில் பல பாகங்களிலும் அன்டிஜென் சோதனை

கொழும்பு, ஜன.7
மேல் மாகாணத்தில் மாத்திரம் முன்னெடுக்கப்பட்ட அன்டிஜென் பரிசோதனையை இனிவரும் நாள்களில் நாட்டின் பல்வேறு இடங்களில் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.
இதற்கமைய, குறிப்பிட்ட சில இடங்களில் எழுமாறாக சிலரை தெரிவு செய்து, 'ரெபிட் அன்டிஜென்' பரிசோதனையை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். பொதுமக்கள் இதற்கு தங்களது ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (ச)




## 1000 ரூபா சம்பள அதிகரிப்பு: சாதகமான தீர்வு விரைவில்

கொழும்பு, ஜன.7
தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு விவகாரத்தில் விரைவில் சாதகமான தீர்வுகள் கிடைக்கப்பெறும் என அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.
மேலும், கொரோனாத் தொற்று நிலைமையில் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் பெருந்தோட்டத் துறையினர் ஏற்றுமதி வருமானத்துக்கு பெரும் பங்காற்றி வருகின்றனர் . இந்நிலையில் நியாயமான சம்பளத்தை பெற்றுக்கொடுப்பதற்காக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார். இது தொடர்பான சாதகமான தீர்வு கிடைக்குமென எதிர்பார்க்கின்றோம்.
இதற்கு பொறிமுறையொன்றைத் தயாரிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (ந-இ)

## கண்ணீர் அஞ்சலி




மலர்வு 19.10.1938 மறைவு 05.01.2021

கௌதமி வெதுப்பக உரிமையாளர் **விமலராஜனின்** அன்புத் தந்தை
**நாகலிங்கம் பூவையா**
அவர்களின் மரணச் செய்தி கேட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தின் அங்கத்தவர்களும் பணியாளர்களும்

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 09 . 1933



மறைவு 04 . 01 . 2021

### திரு.தம்பையா பரம்சோதி

**(இளைப்பாறிய தபால் அதிபர், கொறணை-சுண்டுக்குழி-மட்டக்களப்பு-காரைநகர்)**

காரைநகர் கோவளத்தைப் பிறப்பிடமாகவும் தங்கோடையை வதிவிடமாகவும் தற்போது அவுஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்ட தம்பையா பரம்சோதி (இளைப்பாறிய தபால் அதிபர், கொறணை–சுண்டுக்குழி–மட்டக்களப்பு–காரைநகர்) அவர்கள் 04.01.2021 திங்கட்கிழமை அன்று அவுஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலம் சென்றவர்களான கொறணை பிரபல வர்த்தகர் தம்பையா தங்கம்மா தம்பதிகளின் மகனும், காலம் சென்றவர்களான பொன்னம்பலம் (இளைப்பாறிய ஆசிரியர்) கனகம்மா தம்பதிகளின் மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், சுகந்தி(அவுஸ்திரேலியா), சுகுமார்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தேவானந்தன்(அவுஸ்திரேலியா), சாந்தினி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சகானா, ரவீஸ்னா, பிரனோஜ் ஆகியோரின் அன்புத் தாத்தாவும், துரைராஜா (யாழ்ப்பாணம்), காலம் சென்ற அருள்ஐயா மற்றும் அன்னலட்சுமி(கனடா), சிறீஸ்கந்தராஜா(லண்டன்), கணேசன்(கனடா), செல்வராசா(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தனலட்சுமி(இலங்கை), விஜயலட்சுமி(கனடா), பரமேஸ்வரன்(பிரான்ஸ்), உருத்திரன்(லண்டன்), சுந்தரலட்சுமி(இலங்கை), உமாபதிகுமார்(லண்டன்), இந்திரா(கனடா), விக்கினேஸ்வரி(கனடா), புவனேஸ்வரி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை 10.012021 பிற்பகல் 01:00 மணிக்கு அவுஸ்திரேலியாவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
நாகேஸ்வரி (மனைவி) (அவுஸ்திரேலியா) +61416983487
சுகுமார் (மகன்) (லண்டன்) +447984558458
சுகந்தி (மகள்) (அவுஸ்திரேலியா) +61438948015
கணேசன் (சகோதரன்) (கனடா) +16477053373
செல்வராசா (சகோதரன்) (கனடா) +16476289231

தகவல்
குடும்பத்தினர்

இலங்கையில் முதலாவது

# ஆடைப்பூங்கா ஏறாவூரில்

கொழும்பு,ஜன.7
இலங்கையில் முதலாவது ஆடைப்பூங்கா அடுத்த வருடம், மட்டக்களப்பு ஏறாவூரில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று முதலீட்டு சபையின் தலைவர் சஞ்ஜே மோஹோட்டி தெரிவித்துள்ளார்.
275 ஏக்கர் நிலப்பரப்பில் இது அமையவுள்ளது.
இதற்கான கட்டடப்பணிகள் தற்போது இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளன. இதில் 5 முதலீட்டாளர்கள் முதலீடுகளை மேற்கொள்ளவுள்ளனர்.
இந்தத் திட்டத்துக்கு அமைவாக, வலயத்தில் தொழிற்சாலைகளை அமைப்பதற்காக வெளிநாட்டு ஆடை உற்பத்தியாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
இந்தப் பூங்காவில் உள்ளூர் ஆடைத் தொழில்துறைக்கான இயற்கை மற்றும் செயற்கை ஆடை மூலப்பொருள்கள் உற்பத்தி செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க-இ)



கிளி. ப.தெ.அ.கூ சங்க ஊழியர்கள்

# 2 ஆவது நாளாகவும் பணிப் புறக்கணிப்பு

கிளிநொச்சி, ஜன 7
கிளிநொச்சி மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்துக்கு கூட்டுறவு விதிகளுக்கு மாறாக இடைக்கால நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பில் நேற்று இரண்டாவது நாளாகவும் பணிப்புறக்கணிப்பு இடம்பெற்றது.
கிளிநொச்சி மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாட்டில் உள்ள நிர்வாகத்தின் பணிகளை நிறுத்தி, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் தெரிவு செய்யப்பட்ட இடைக்கால நிர்வாகம் பதவி ஏற்கச் சென்றமையைத் தொடர்ந்து குறித்த பணிப்புறக்கணிப்பு நேற்று இரண்டாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது. 1983ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க திருத்திய கூட்டுறவு கட்டளைச் சட்டத்துக்கு முரணாக மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தன்னிச்சையாக இடைக்கால நிர்வாகம் ஒன்றைத் தெரிவுசெய்து கடமைகளைப் பொறுப்பேற்குமாறு அனுப்பியதாலேயே இந்தப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகிறோம் என்று பணியாளர்களும், அங் கத்தவர்களும் தெரிவித்தனர். (ப-6)

# குற்றச்சாட்டுக்களை நிரூபித்தால் பதவியிலிருந்து வெளியேறத் தயார்

***கிளிநொச்சி ப.தெ.கூ சங்க தலைவர் தெரிவிப்பு***



கிளிநொச்சி, ஜன. 7
கிளிநொச்சி பனை தென்னை வள கூட்டுறவு சங்கத்தின் தற்போதைய நிர்வாகத்தில் குற்றச்சாட்டுகள் இருந்து, அவை நிரூபிக்கப்பட்டால் பொறுப்புக்களை ஒப்படைத்து விட்டுச் செல்ல நாங்கள் தயாராக இருக்கின்றோம் என அந்தச் சங்கத்தின் தலைவர் மதனரூபன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
கூட்டுறவுச் சட்ட விதிகளுக்கு அமைவாக வாக்கெடுப்பு மூலம் நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றது. இந்த நிர்வாகம், பணியாளர்கள் மற்றும் அங்கத்தவர்களின் நலன்களில் அக்கறை கொண்டு செயற்படுகின்றது. அரசியல் தலையீடுகள் எதனையும் இந்தப் பணியாளர்கள் விரும்பவில்லை. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் தன்னுடைய தனிப்பட்ட காரணங்களுக்காகவே இடைக்கால நிர்வாகத்தைப் பொறுப்பேற்குமாறு அனுப்பியிருக்கின்றார். அதற்கு ஒருபோதும் நாங்கள் இடமளிக்கப்போவதில்லை.
எங்களுடைய நிர்வாகத்தில் ஏதேனும் முறைகேடுகள் இருப்பின் ஆதாரங்களுடன் நிரூபித்தால், சகலவற்றையும் ஒப்படைத்து விட்டு உடனடியாக வெளியேறத் தயாராக இருக்கிறோம் என்றார். (ப-6)

# தேசிய கீதம் மொழிபெயர்ப்புக்கு தடை விதிக்கப்பட வேண்டும்!!

***மீண்டும் முருங்கைமரம்ஏறும் சிங்கள பௌத்த அமைப்புக்கள்***

கொழும்பு. ஜன. 7
தேசிய கீதம் மொழி பெயர்க்கப்படுவதை தடைசெய்ய வேண்டுமென தாய் நாட்டைப் பாதுகாக்கும் தேசிய இயக்கத்தின் தலைவர் எல்லே குணவன்ச தேரரால் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.
புதிய அரசமைப்பை உருவாக்கும் நிபுணர் குழுவிடம் இந்த யோசனை ஒப்படைக்கப்பட்டுள்ளது. தேசிய கீதம் இனி வரும் காலங்களில் மொழி பெயர்க்கப்பட்டு இசைக்கப்படுவதை அனுமதிக்கக் கூடாது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. நாட்டின் இறைமைக்கும் பௌதீக ஒருமைப்பாட்டுக்கும் குந்தகம் ஏற்படுத்தும் வகையில் செயற்படுவோரின் சிவில் உரிமைகளை ரத்துச்செய்யும் வகையிலான சரத்தொன்றைப் புதிய அரசமைப்பில் உள்ளடக்க வேண்டுமென அவர் தனது பரிந்துரைகளில் குறிப்பிட்டுள்ளார். (ஒ.இ)






### கடந்த ஆண்டில்

# வாகன விபத்துக்களால் ஆயிரத்து 844 பேர் சாவு



கொழும்பு,ஜன.7

**வாகன விபத்துக்களால் கடந்த ஆண்டில் ஆயிரத்து 844 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.**

2018 ஆம் ஆண்டில் வாகன விபத்துகளின் காரணமாக 2 ஆயிரத்து 689 பேர் உயிரிழந்தனர்.

இதன்படி 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டில் வாகன விபத்துக்களால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 800 ஆக குறைவடைந்துள்ளது.

இதேவேளை வாகன விபத்துகள் காரணமாக கடந்த ஆண்டில் பலத்த காயங்களுக்கு உள்ளானவர்கள் எண்ணிக்கை 5 ஆயிரத்து 284 ஆக பதிவாகியுள்ளது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளே இதற்கு முதன்மைக் காரணம் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ-இ)

## சுற்றுலாவிகளை அழைத்துவரும் அரசின் நோக்கம்தான் என்ன?

### ஜே.வி.பி. கேள்வி


கொழும்பு, ஜன.7

வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை அழைத்து வருவதற்குப் பதிலாக அரசின் சகாக்களின் தேவைக்கேற்ப சுற்றுலாப் பயணிகளை அழைத்து வரும் நடவடிக்கைகளே தற்போது முன்னெடுக்கப்படுகின்றன என்று மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை அழைத்து வருவதற்குப் பதிலாக அரசின் சகாக்களின் தேவைக்கேற்ப சுற்றுலாப் பயணிகளை அழைத்து வரும் நடவடிக்கைகளே தற்போது முன்னெடுக்கப்படுகின்றன. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசிடம் ஆட்சியை ஒப்படைத்த மக்கள் தற்போது அதிருப்தியடைந்துள்ளனர்.

மினுவாங்கொட கொத்தணி உருவானமைக்குக் காரணம் உக்ரைனிலிருந்து வந்த பிரஜைகளே என்று அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்தது. அவ்வாறிருக்கையில் தற்போது அதே நாட்டிலிருந்து சுற்றுலாப் பயணிகள் வரவழைக்கப்படுகிறார்கள் என்றால் அதற்கான காரணம் என்ன? பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தொடர்பில் அரசு பொறுப்புக் கூற வேண்டும். நாட்டுக்குத் திரும்புவதற்கு எதிர்பார்த்துள்ள 68 ஆயிரம் இலங்கையர்களை எவ்வாறு அரசு அழைத்து வரப்போகிறது? வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் எங்கு செல்கிறார்கள்? என எமக்கும் தெரியாது என்று சுற்றுலா சபை கூறுகிறது. இவற்றின் பின்னணி என்ன என்பதை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெளிவுபடுத்த வேண்டும் என்றார். (ப)



## 1.5 பில்லியன் "மாஸ்க்" கடலுடன் கலப்பு

கொழும்பு,ஜன.7

கடந்த ஆண்டில் 1.5 பில்லியன் அளவான முகக்கவசங்கள், கடலுடன் கலந்துள்ளன என்று சமுத்திர சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

அந்த முகக்கவசங்களின் எண்ணிக்கை 5 ஆயிரம் தொன் அளவான எடையைக் கொண்டது என்று அந்த அதிகார சபையின் முகாமையாளர் பேராசிரியர் டர்னி பிரதீப் குமார தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக கடல்வாழ் உயிரினங்களுக்கும், தனிநபர்களுக்கும் பாதிப்பு ஏற்படக்கூடும்.

எனவே முகக்கவசங்களை முறையான வகையில் அழிக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-இ)

## 'ரூ.1000' கோரி போராட்டம்



நுவரெலியா. ஜன. 7

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும். 25 நாள்கள் வேலை அவசியம் என வலியுறுத்தி மஸ்கெலியா நகரில் நேற்று புதன்கிழமை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பெருந்தோட்டத் தொழிலாளர் ஊதிய உரிமைக்கான இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போராட்டத்துக்கு மலையக சிவில் அமைப்புகள் ஆதரவு வழங்கின.

தனிமைப்படுத்தல் விதிமுறைகளைப் பின்பற்றி குறித்த போராட்டத்தில் கலந்துகொண்ட மக்கள், கறுப்பு நிறப்பட்டி அணிந்து தோட்டத் தொழிலாளர்களின் தொழில் உரிமைகளை உறுதிசெய்ய வேண்டும் என கோஷம் எழுப்பினர்.

அத்துடன், தோட்டத் தொழிலாளர்களை இந்தமுறையும் ஏமாற்றுவதற்கு முற்பட்டால் போராட்டம் வெடிக்கும் எனவும் எச்சரிக்கை விடுத்தனர்.

இந்த விடயத்தில் அரசாங்கத்தின் காத்திரமான தலையீடுகள் அவசியம் என போராட்டக்காரர்கள் மேலும் தெரிவித்தனர். (ரி5-44)



ஹற்றன், ஜன. 7

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்க வேண்டும் என வலியுறுத்தி தமிழ் முற்போக்கு கூட்டணி நேற்று வியாழக்கிழமை கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தது.

ஹற்றன் மல்லியப்பு சந்தியில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான பழனி திகாம்பரம், உதயகுமார் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

நாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ள நிலையில், தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா அவசியம் என போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

இதேவேளை, சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்காவிட்டால் தொடர்ந்து போராட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுத்தனர். (ரி5-44)

## சுற்றுலாவிகளை வரவழைத்து நாட்டை அழித்துவிடக்கூடாது

### விஜித ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 7

உக்ரைனில் இருந்து சுற்றுலாப் பயணிகளைக் கொண்டுவந்து அரசு நாட்டை அழித்துவிடக்கூடாது என தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொவிட்-19 வைரஸ் தீவிரம் காரணமாக உக்ரைன் நாட்டை முற்றாக மூடிவிடவேண்டும் என அந்த நாட்டுப் பிரதமர் அறிவித்திருக்கும் நிலையில் உதயங்கவின் தேவைக்காக அந்த நாட்டில் இருந்து சுற்றுலாப் பயணிகள் அழைத்துவரப்பட்டிருக்கின்றனர். எமது நாட்டுக்கு கொவிட் -19 மூன்றாம் அலை வந்தது உக்ரைன் பிரஜையால் என சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். அவ்வாறெனின் அரசு உக்ரைன் சுற்றுலாப் பயணிகளைக் கொண்டுவந்து நாட்டை அழித்துவிடவா முயற்சிக்கின்றது - என்றார். (ப)

# இணைப்பு அதிகாரிகளாக இராணுவ உத்தியோகத்தர்

### ஊடகவியலாளர்கள் அமைப்பு விசனம்

கொழும்பு, ஜன.7

கொவிட் - 19 நெருக்கடியைக் கையாள்வதற்காக ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் இராணுவ உத்தியோகத்தர்கள் இணைப்பு அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளதன் ஊடாக நாடளாவிய ரீதியில் இராணுவமயமாக்கல் செயற்பாடு விரிவுபடுத்தப்படுகின்றது என இலங்கையில் ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர்கள் அமைப்பு விசனம் வெளியிட்டுள்ளது.

நாட்டை முழுமையாக இராணுவமயப்படுத்தும் வகையில் இச் செயற்பாடு அமைந்துள்ளது என்று பலரும் விசனம் வெளியிட்டுவரும் நிலையில், வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்துக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரியாக மேஜர் ஜெனரல் ஏ.பி.ஐ. பெர்னான்டோ நியமிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் சர்வதேச உண்மைக்கும் நீதிக்கு மான செயற்றிட்டம் விசனம் தெரிவித்திருந்தது. இந்த நிலையிலேயே 'கொவிட்-19 நெருக்கடியைக் கையாள்வதற்காக இந்த நியமனங்களின் ஊடாக நாடளாவிய ரீதியில் இராணுவமயமாக்கல் செயற்பாடு விரிவுபடுத்தப்படுகின்றது என்று இலங்கையில் ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர்கள் அமைப்பு விசனம் வெளியிட்டுள்ளது. (ப)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## உறங்கும் பேராபத்து!

ஒரு பெரும் போரை எதிர்கொள்ளும்போது அதன் பாதிப்புக்களாக உடனடியாக நிகழும் உயிரிழப்புக்களோ, அங்கவீனங்களோ, சொத்தழிவுகளோ மட்டும் இருந்துவிடுவதில்லை. இறப்புக்களைத் தாண்டி ஏராளமான பாதிப்புக்கள் அதன் பின்னரான காலவோட்டத்தில் நீண்டுவரும். இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து ஒரு தசாப்தகாலம் தாண்டிவிட்ட பின்னரும் எண்ணற்ற குடும்பங்கள் இன்னும் போர் தந்த பாதிப்புகளால் நிம்மதியை இழந்து, வாழ்வாதாரத்தைத் தொலைத்து அல்லாடிக்கொண்டிருக்கின்றன. உண்மையில் போரை விடவும் மிகுந்த பேராபத்தான நிலைமை இதுதான். அதேபோல தற்போது கத்தியின்றி ரத்தமின்றி இடம்பெற்றுக் கொண்டிருக்கும் கொரோனாவுக்கு எதிரான போரும் இதுபோன்றதான பாரதூரமான பின்விளைவுகளைத் தோற்றுவித்துவிடுமோ என்ற அச்சம் மேலிடுகின்றது. அந்த ஆபத்து வெகுதொலைவில் இல்லை.


கொரோனாப் பெருந்தொற்றை அடுத்து மக்களின் அன்றாடப் பாவனைப் பொருள்களில் ஒன்றாக 'மாஸ்க்' மாறிவிட்டது. உணவு,உடை, உறையுள் என்ற அடிப்படைத் தேவைகளில் நான்காவதாக 'மாஸ்க்கும்' இணைந்துவிட்டது. 'மாஸ்க்' இன்றி வெளியில் நடமாட முடியாது என்பது இலங்கையில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. கொரோனாவில் இருந்து தற்காத்துக் கொள்வதற்காகக் கொண்டுவரப்பட்ட இந்த நடைமுறைகள் உரிய வகையில் பின்பற்றப்படாமையால் கொரோனாவின் பின்னரான பேராபத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்குள் நாம் அனைவரும் தள்ளப்பட்டுள்ளோம். இலங்கையில் கடந்த வருடம் 1.5 பில்லியன் 'மாஸ்க்'குகள் கடலுடன் கலந்துள்ளன என்கின்றன ஆய்வறிக்கைகள். இந்த 'மாஸ்க்' மலைக் குவியல் சுமார் 5 ஆயிரம் தொன் எடையிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 'இது ஆபத்தான நிலை' என்று இப்போதே அலறத் தொடங்கியிருக்கிறது சமுத்திர சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபை.

'மாஸ்க்' சட்டென அழிந்துவிடும் பொருளல்ல. பிளாஸ்டிக் அளவுக்கு வீரியம் உடையதாக அது இல்லாவிட்டாலும் அது அழிவடைவதற்கு நீண்டகாலம் தேவை. அதேநேரம் பிளாஸ்டிக் என்பது பெருந்தொற்றை ஏற்படுத்தப்போவதில்லை. ஆனால் மேற்குறிப்பிட்டுள்ள 1.5 பில்லியன் 'மாஸ்க்'களில் எத்தனை 'மாஸ்க்'கள் நோய்க் காவிகளாக - தீவிர நோய்க் காவிகளாக உள்ளனவோ என்பதும் கவனிக்கத்தக்கது. ஏனெனில் கொரோனா நோயாளிகள் முதல் சுவாச நோயாளிகள் வரை எல்லாவிதமான நோயுள்ளவர்களும் 'மாஸ்க்'கை பயன்படுத்தியிருப்பர். எந்த 'மாஸ்க்'கில் எந்த நோய்க்கிருமி ஒளிந்திருக்குமோ என்பது எவருக்குமே தெரியாது. இந்த விடயத்தில் பிளாஸ்ரிக் என்னும் பேரரக்கனை விடவும் ஆபத்தான அரக்கனாக அமைகின்றது 'மாஸ்க்' மலைக்குவியல். இதனால், மீண்டும் ஒரு பெருந்தொற்று - மற்றுமொரு நோய்ச் சுழற்சி ஏற்படுவதற்கான வாய்ப்புகளே அதிகம்.

இலங்கை ஒரு தீவு நாடு. அள்ளஅள்ளக் குறையாத வளம் சுரக்கும் கடல் சூழவுள்ளது. பெரும் கடன்சுமைக்குள் இலங்கை சிக்கியுள்ள நிலையில் அதிலிருந்து இந்த அழகிய தீவை விடுவிக்கும் திராணி கடல் வளத்துக்கும் உண்டு என்பது இங்குள்ள வல்லுநர்கள் பலரின் கருத்து. இவ்வாறிருக்கையில் கடலில் கலந்துள்ள-இனிக் கலக்கப்போகின்ற 'மாஸ்க்'குகளால் இலங்கையின் எதிர்காலப் பொருளாதாரமே சின்னாபின்னமாகிச் சிதிலமாகும் நிலையும் இருக்கத்தான் செய்கின்றது. அதைவிட கடல்வாழ் உயிரிகளுக்கும் இந்த 'மாஸ்க்' மலைகள் பெரும் சவாலாக இருக்கப் போகின்றன.

ஆக, இது ஒரு பெருந்தீவிர நிலை. இந்தத் தீவுக்கு மட்டுமல்லாது உலக சுற்றுச்சூழலுக்கு விடுக்கப்பட்டுள்ள சாவு மணி எச்சரிக்கை. கொரோனாவை அழித்துவிடலாம் என்பதற்கான சமிக்ஞைகள் தெளிவாகவே தெரிகின்றன. ஆனால், கொரோனாவின் பின்னரான இதுபோன்ற பேராபத்துக்களை உணராவிட்டால் அது நிவர்த்தி செய்யவே முடியாத பாதிப்புகளைத் தரக்கூடும். எனவே பின்விளைவுகளை மனதில் நிறுத்தி, உரிய வகையில் அனைவரும் செயற்பட வேண்டும். குறிப்பாக பயன்படுத்திய முகக்கவசங்களை அகற்றுதல், அழித்தல் என்பவற்றுக்கான ஒரு சரியான பொறிமுறையைக் கண்டறிய வேண்டும். அதன்மூலமே உலகையும், இலங்கையையும் எதிர்காலத்தில் பீடிக்கப்போகும் கழிவு மாஸ்க் அசுரனின் பிடியில் இருந்து விடுவிக்க முடியும்..!

### இன்றைய கேலிச்சித்திரம்




நன்றி - நாமல் அமரசிங்க

# உயிரியல் ஆயுத தாக்குதல்; தடுக்க அரசு நடவடிக்கை

## சமல் ராஜபக்ச தெரிவிப்பு



**கொழும்பு, ஜன.7**

**உயிரியல் ஆயுதத் தாக்குதல்களைத் தடுக்க பல நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது என்று அரச பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ச தெரிவித்தார்.**

உலகில் ஒருமித்த கருத்தால் உயிரியல் ஆயுதங்களைப் பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டிருந்தாலும், அவை இன்னும் பல்வேறு அரசியல் மற்றும் வர்த்தக தந்திரங்களுக்கு இரகசியமாகப் பயன்படுத்தப்படுகின்றன. இலங்கை உள்ளிட்ட வளர்ச்சியடையாத நாடுகள் இந்த உயிரியல் ஆயுதங்களைச் சோதனை செய்வதை இலக்காகக் கொள்ள வாய்ப்புள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண நாடாளுமன்றில் தெரிவித்தார். அதை அடுத்தே சமல் ராஜபக்ச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வதேச மாநாடுகளுக்கு ஏற்ப இலங்கையில் உயிரியல் ஆயுதத் தாக்குதல்களைத் தடுக்க பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன என்று சமல் ராஜபக்ச மேலும் தெரிவித்தார். (ப)



## மனித அபிவிருத்தி அறிக்கை தினேஸிடம் கையளிப்பு

கொழும்பு, ஜன.7

'ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் மனித அபிவிருத்தி அறிக்கை 2020' இன் பிரதியை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ரொபர்ட் ஜுகாம், வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவிடம் கையளித்துள்ளார்.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் வெளிநாட்டு அமைச்சில் இடம்பெற்றது.

இதன்போது நுண்கடன் திட்டங்கள் மற்றும் அவை சார்ந்த பாதிப்புக்கள், டிஜிட்டல் உட்கட்டமைப்பிலான முன்னேற்றம், மனிதர்கள் யானைகள் மோதல் போன்ற மக்களைப் பாதிக்கும் பல விதமான பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. (ப)

### டெங்கு பெருகும் சூழல்

## எழுதுமட்டுவாள் தெற்கில் 8 பேர் மீது சட்ட நடவடிக்கை

சாவகச்சேரி,ஜன.7

எழுதுமட்டுவாள் தெற்கில் டெங்கு நுளம்பு உருவாகக்கூடிய வகையில் காணிகள் மற்றும் குடியிருப்புகளை வைத்திருந்த எட்டுப் பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

சுகாதாரப் பகுதியினர் மற்றும் டெங்கு கட்டுப்பாட்டு உதவியாளர்கள் ஆகியோர் இணைந்து குறித்த பகுதியில் நேற்று திடீர் பரிசோதனை மேற்கொண்டனர்.

இதன்போது குடியிருப்புகள் மற்றும் காணிகளில் டெங்கு குடம்பிகளுடன் நீர் ஏந்து பொருள்கள் காணப்பட்ட 8 உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)



# முல்லைத்தீவு மாந்தை கிழக்கின் முதன்மை வீதிகள் சீரமைப்பு

வன்னேரிக்குளம்,ஜன.7
முல்லைத்தீவு மாந்தை கிழக்கின் முதன்மை வீதிகளின் சீரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக குறித்த வீதிகள் சீரமைப்பு இன்றிக் காணப்பட்டன. இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பொது அமைப்புக்களால் பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டது.
இந்நிலையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி பங்களிப்புடன் தற்போது மாந்தை கிழக்குக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
வன்னிவிளாங்குளத்தில் இருந்து பாண்டியன்குளம் வரையும், துணுக்காயில் இருந்து ஒட்டறுத்தகுளம் ஊடாக நட்டாங்கண்டல் வரையான வீதிகளினதும் சீரமைப்பு பணிகள் கட்டம் கட்டமாக தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஜரி -2)

# தனிமைப்படுத்தப்பட்டவர் போதைப்பொருளுடன் கைது



மட்டக்களப்பு,ஜன.7
தனிமைப்படுத்தப்பட்ட காத்தான்குடிப் பகுதியில் இருந்து வெளியேறிய ஒருவர், போதைப் பொருளுடன் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
சந்தேக நபரிடம் இருந்து 10 கிராம் ஹசிஷ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. 38 வயதான குறித்த சந்தேகநபருக்கு எதிராக தனிமைப்படுத்தல் மற்றும் போதைப்பொருள் வைத்திருத்தல் ஆகிய இரண்டு சட்டங்களின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-இ)




# நினைவேந்தல் நிகழ்வு

சாவகச்சேரி,ஜன.7
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற முன்னாள் தலைவர் சங்கரப்பிள்ளை நமசிவாயத்தின் 27 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று சங்க மண்டபத்தில் நடைபெற்றது.
சங்கத் தலைவர் ந.சிவபாலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அன்னாரின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்தும், மலர்தூவியும் வணிகர்கள் அஞ்சலி செலுத்தினர். அன்னாரின் நினைவாக புரேவிப் புயல் மற்றும் பெருமழையால் பாதிக்கப்பட்ட சங்க அங்கத்தவர்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.(ஐ-9)

# 'நல்லூரான் செம்மணி வளைவு' பொங்கல் தினத்தன்று திறப்பு

**யாழ்ப்பாணம்,ஜன.7**
**யாழ்ப்பாணம் செம்மணி வீதியில் பிரமாண்டமாக அமைக்கப்பட்ட 'நல்லூரான் செம்மணி வளைவு' எதிர்வரும் 14 ஆம் திகதி பொங்கல் தினத்தன்று நண்பகல் 12 மணிக்கு திறக்கப்படவுள்ளது.**



யாழ்ப்பாண மக்களின் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களின் புனித வாழ்க்கை நெறியான கந்தபுராண கலாசாரத்தின் அடையாளங்கள் பல இவ் வளைவில் வடிவமைக்கப்பட்டுள்ளன.
2019 ஆண்டு ஓகஸ்ட் மாதம் குறித்த வளைவுக்கான அடிக்கல், முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனால் நடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-111)

# பாடசாலைகள் ஆரம்பம்; தனிமைப்படுத்தப்பட்ட பகுதி மாணவருக்கான திட்டம் என்ன

## ஆசிரியர் சங்கம் கேள்வி

கொழும்பு. ஜன.7
மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தப்படாத பகுதிகளில் சாதாரணதர மாணவர்களுக்கு மாத்திரம் கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று கல்வி அமைச்சர் கூறியிருக்கின்றார். அவ்வாறெனில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள சாதாரணதர மாணவர்களுக்காக முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் எத்தகையது என இலங்கை ஆசிரியர் சங்கம் கேள்வியெழுப்பியுள்ளது.
இது தொடர்பில் அந்தச் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்ததாவது;
கொவிட் பரவல் அச்சுறுத்தலுக்கு மத்தியில் பாடசாலைகளை ஆரம்பிப்பதாயின் கட்டுப்பாட்டு நட வடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும். மாணவர்களை அச்சமின்றி பாடசாலைகளுக்கு அனுப்புவதற்கான சூழலை பெற்றோருக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்க வேண்டும். அவ்வாறில்லாமல் பாடசாலைகளை ஆரம்பிக்க முடியாது. தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள சாதாரணதர மாணவர்களுக்காக முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் எத்தகையது மார்ச் மாதம் இடம்பெறவுள்ள சாதாரணதரப் பரீட்சைக்கு மேல் மாகாணத்தில் முடக்கப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள மாணவர்களும் தோற்றவுள்ளனர் என்பதை கல்வி அமைச்சர் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றார். (ப)

## 16 வயதுக்கு குறைந்தவர்களை

# தொழிலுக்கு அமர்த்துவது தண்டனைக்குரிய குற்றம்

## அமைச்சர் நிமல் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.7
16 வயதுக்கு குறைந்தவர்களை எந்தவகையான தொழிலுக்கும் பயன்படுத்த முடியாது அவ்வாறானோரை இணைத்துக்கொள்வது தண்டனைக்குரிய குற்றமாகும் என்று தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தொழிற்சாலைகள் (திருத்தச்) சட்ட மூலங்கள் மீதான விவாதத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சிறுவர்களைத் தொழிலுக்கு இணைத்துக்கொள்வது தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பெரியளவில் பேசப்பட்டு வருகிறது.
யுனிசெப் அமைப்பின் ஆய்வின் பிரகாரம் உலகளாவிய ரீதியில் ஒரு மில்லியன் சிறுவர்கள் தொழிலுக்காக இணைத்துக்கொள்ளப்பட்டிருக்கி ன்றனர்.
இலங்கையில் உள்ள முழு சிறுவர் தொகையில் 2.3 வீதமான சிறுவர்கள் தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அதில் 43 ஆயிரத்து 714 பேர் சட்ட விரோத தொழில்களில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்- என்றார். (ஐ-இ)

# தடை நீடிப்பு

கொழும்பு, ஜன. 7
இலங்கை மத்திய வங்கி, பெர்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனம் மீது விதித்த தடையை மேலும் ஆறு மாதத்துக்கு நீடித்துள்ளது.
மேலும், மத்திய வங்கியால் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளுக்கமைவாகவே நேற்றுமுன்தினம் குறித்த தடை நீடிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ரி5)

# பழிவாங்குவது என்றால் எனக்கு இலக்[illegible] வையுங்கள்

## சம்பிக்க ரணவக்க உருக்கம்

கொழும்பு, ஜன.7
நட்டத்தில் இயங்கிய நகர அபிவிருத்தி அதிகாரசபையை மீண்டும் இலாபம் உழைக்கும் கட்டமைப்பாக மாற்றியமைக்கு பழிவாங்குவதாயின் என்னை மாத்திரம் இலக்குவையுங்கள். மாறாக திறமையான அரச உத்தியோகத்தர்களைப் பழிவாங்கவேண்டாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த காலத்தில் ராஜபக்ச அரசால் விற்பனை செய்யப்பட்ட இடங்களுக்கான நிதியை மீள வசூலித்துக்கொண்டதுடன் ஊழல் மோசடிக்காரர்களிடமிருந்து நகர அபிவிருத்தி அதிகாரசபையை விடுவித்து, அங்கு பணியாற்றிய சுமார் 40 ஆயிரம் ஊழியர்களுக்கு பண்டிகைக் கால முற்கொடுப்பனவை வழங்கக்கூடியவாறு அதிகாரசபையின் நிதிக்கட்டமைப்பை வலுப்படுத்திய அதிகாரிகள் தற்போதைய அரசி[illegible]ண்டுதலின் விளைவாக இர[illegible]ப் பொலிஸாரால் அழைத்து[illegible]ல்லப்படுகின்றனர்.
நட்[illegible]தை அனுபவித்துக்கொண்டிரு[illegible] நகர அபிவிருத்தி அதிகாரச[illegible]க்கு தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்களை நியமித்ததன் ஊடாக அங்கு காணப்பட்ட ஊழல் மோசடிகளை இல்லாதொழித்து, மீண்டும் அதனை இலாபம் உழைக்கும் கட்டமைப்பாக மாற்றினோம் - என்றார். (ஐ-இ)

# சிறைச்சாலையில் கொரோனா: சந்தேகநபருக்குப் பிணை

**கொழும்பு, ஜன. 7**

**சிறைச்சாலைகளில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று அபாயத்தை சுட்டிக் காட்டியதையடுத்து சந்தேக நபர் ஒருவர் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டார். ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவால் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. அதனை ஏற்றுக் கொண்டே கோட்டை நீதிவான் பிணை வழங்கினார்.**

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது புத்தளத்திலிருந்து 222 பேருந்துகளில் 12 ஆயிரம் இடம்பெயர்ந்த வாக்காளர்களை, மன்னார் சிலாவத்துறைப் பகுதிக்கு வாக்களிக்கச் செல்வதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து 9.5 மில்லியன் ரூபா அரச சொத்தை தவறாக பயன்படுத்திய வழக்கில் கைது செய்யப்பட்ட மூன்றாவது சந்தேக நபரான அழகரட்ணம் மனோரஞ்சனே நீதிமன்றால் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதி பிணை மனு முதல் தடவையாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது அது நிராகரிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் மீண்டும் பிணை மனு தாக்கல் செய்யப்பட்டு அது கோட்டை நீதிவான் பிரியந்த லியனகே முன்னிலையில் இன்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது சட்டத்தரணி கே.வி. தவராசா, கொழும்பு மகசின் சிறைச்சாலையில் கொரோனா தாக்கம் அதிகரித்துள்ளது. அங்கு உயிரிழப்பும் நிகழ்ந்துள்ளது. எனவே சந்தேக நபருக்கு பிணை வழங்க வேண்டும் என்ற வாதத்தை முன்வைத்தார். அதனை ஏற்றுக் கொண்ட நீதிவான் ஒரு லட்சம் ரூபா ரொக்கப் பிணையில் சந்தேக நபரை விடுவித்தார். (ஒ.5)



## சீனத் தூதுவர்–அஜித் நிவாட் சந்திப்பு

கொழும்பு, ஜன.7

இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் ஜென்ஹோங், இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ராலை கடந்த திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

கொழும்பு துறைமுக நகரம், ஹம்பாந்தோட்டை துறைமுகம் உள்ளிட்ட அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும், பொருளாதார ஒத்துழைப்புகளை மேம்படுத்துவது தொடர்பிலும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது என கொழும்புக்கான சீன தூதரகத்தின் ருவிட்டர் பக்கத்தில் குறிப்பிடப்பட் டுள்ளது.

இதேவேளை, இந்த சந்திப்பில் முதலீடு, வர்த்தகம் மற்றும் சுற்றுலாத்துறை மேம்படுத்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது என இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தனது ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். (ந)

## இரணைமடு வான்கதவுகள் திறப்பு

கிளிநொச்சி, ஜன. 7

இரணைமடுக் குளத்தின் நீரேந்துப் பகுதிகளில் கிடைக்கப்பெறும் சிறியளவிலான மழைவீழ்ச்சி காரணமாக குளத்துக்கான நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனையடுத்து நேற்று பி.ப. 2 மணிக்கு இரண்டு வான் கதவுகள் 6 அங்குலத்துக்கு திறந்து விடப்பட்டன. மேலும் நீர் வரத்து அதிகரித்தால் மேலும் சில வான் கதவுகள் திறக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.. (ஒ,6)

## நல்லாட்சி அரசின் தெரிவுக்குழு விசாரணையில் நம்பிக்கையில்லை

### அமைச்சர் சரத் வீரசேகர

கொழும்பு, ஜன. 7

உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டு தாக்குதல்கள் சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்காக நல்லாட்சியின் போது நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் விசாரணை அறிக்கை தொடர்பில் தற்போதைய அரசுக்கு திருப்தி இல்லை என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.



நாடாளுமன்றத்தில் நேற்று ஆளும் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் நலின் பெர்ணான்டோவால் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

'உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் எமது அரசால் பரந்துபட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. கடந்த ஆட்சியின்போது நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணையின்போது வெளிவராத பல தகவல்கள், ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைமூலம் வெளிவந்துள்ளன. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் விசாரணை அறிக்கை குறித்து எமது அரசுக்கு திருப்தி இல்லை. ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் எதிர்வரும் 31 ஆம் திகதி நிறைவடைய வுள்ளன. அவ்வாறு நிறைவடைந்த பின்னர் மேலதிக தகவல்களை அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும்' என்றார் வீரசேகர. (ஒ.44)

## ஆடுகளை 'ஆட்டையை' போட்டவர்கள் சிக்கினர்

கிளிநொச்சி, ஜன. 7

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாயவனூர் பகுதியில் பல நாள்களாக ஆடுகள் திருடப்பட்டு வந்தன. அவற்றைத் திருடிய சந்தேகத்தில் 4பேரை பொலிஸார் நேற்று கைதுசெய்துள்ளனர்.

நேற்றைய தினமும் இரண்டு ஆடுகள் திருடப்பட்டுள்ளது எனப் பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. அவை இறைச்சியாக்குவதற்காக புளியம்பொக்கணைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது எனவும் அந்த முறைப்பாட்டில் கூறப்பட்டிருந்தது. இதனையடுத்து புளியம்பொக்கணைக்குச் சென்ற பொலிஸார், இறைச்சியாக்க தயார் நிலையிலிருந்து ஆடுகளை மீட்டனர். அத்துடன் குறித்த 4 சந்தேக நபர்களையும் கைது செய்தனர். (ஒ.113)

## சில பகுதிகள் முடக்கம்

கொழும்பு, ஜன.7

இலங்கையில் மேலும் சில பகுதிகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்படுகின்றன என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார். அதன்படி, கண்டி மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களின் சில பகுதிகள் நேற்றுக் காலை 5 மணி முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, இலங்கையில் மேலும் சில பகுதிகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கமைய, அட்டாளைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சில கிராமசேவகர் பிரிவுகளும், ஆலையடிவேம்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சில கிராம சேவகர் பிரிவுகளும், அக்கறைப்பற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் நகர அதிகாரத்துக்குட்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவு களும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன. (வ-இ)

## திருமலையில் மாடுகளை தாக்கும் புதிய நோய்

திருகோணமலை, ஜன.7

திருகோணமலை மாவட்டத்தின் சில இடங்களில் உள்ள மாடுகள் ஒருவித நோய்த்தாக்கத்துக்கு உள்ளாகி வருகின்றன. கிண்ணியா பக்கிரான் வெட்டை, சுங்கான் குழி , ஆயிலியடி வட்டமடு வான் எல போன்ற பிரதேசங்களிலுள்ள மாடுகளிலேயே நோய் அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளன.

மாடுகளுக்கு கட்டி போடுதல் மற்றும் வாயால் உமிழ் நீர் வடிதல் போன்ற அறிகுறிகள் தென்படுகின்றன என பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் தற்பொழுது பால் கறப்பதிலும், இறைச்சிக்காக மாடுகளை விற்பதிலும் பெரும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

நோய் நிலை தொடருமாக இருந்தால் ஆயிரக்கணக்கான மாடுகள் இறக்கின்ற சந்தர்ப்பம் உள்ளது என பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர். இதேவேளை வடக்கிலும் மாடுகள் இலம்பி எனப்படும் ஒருவகை நோயால் பாதிக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## சஜித்தின் சர்வதேச ஆலோசகராக தயான் ஜயதிலக

கொழும்பு, ஜன.7

மூத்த அரசியல் ஆய்வாளர் மருத்துவர் தயான் ஜயதிலக, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் சர்வதேச விவகாரங்கள் தொடர்பான மூத்த ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் ஆலோசகராக இருந்த இவர், 1989 ஆம் ஆண்டில் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளில் இளைஞர் விவகார அமைச்சராகவும் பதவி வகித்திருந்தார். (ஐ-இ)

# ஜனவரி மாத ராசிபலன்கள்






பிறரின் நட்பைப் பயன்படுத்தி எதையும் செய்து முடிக்கும் சிம்மராசியினரே!

உங்களிடம் ஆளக்கூடிய திறமை இருக்கும். இந்த மாதம் ராசியில் ராகு இருக்கிறார். வீண் அலைச்சல் குறையும். சிக்கல்கள் தீரும். எண்ணிய காரியம் கைகூடும். குறிக்கோள் நிறைவேறும். தாமதமாகியிருந்த காரியங்கள் வேகம் பெறும். சமூகத்தில் அந்தஸ்து உண்டாகும்.

தொழில் வியாபாரத்தில் மாற்றம் செய்ய எண்ணுவீர்கள். சிலர் புதிய தொழில் தொடங்க முற்படுவார்கள். அவர்கள் கவனமாகச் செயல்படுவது நல்லது. வாடிக்கையாளர்களின் தேவைகளைச் சமாளித்து விடுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் உண்டாகும். குறிக்கோளை அடைவதை லட்சியமாகக் கொண்டு செயற்படுவீர்கள். புதிய தொடர்புகள் மூலம் லாபம் கிடைக்கும்.

கணவன் மனைவிக்கிடையே இருந்து வந்த வாக்குவாதங்கள் அகலும். வேலை நிமித்தமாக குடும்பத்தை விட்டு வெளியே தங்க நேரிடலாம். சுபச்செலவுகள் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உஷ்ணம் சம்பந்தமான நோய் உண்டாகலாம். அடுத்தவரைப் பார்த்து எதையும் செய்யத் தோன்றலாம். அதனைத் தவிர்ப்பது நல்லது.

**பெண்களுக்கு** எண்ணிய காரியம் கை கூடும். வீண் அலைச்சல் குறையும். சிக்கலான பிரச்சினைகளில் நல்ல முடிவு கிடைக்கும்.

**கலைத்துறையினருக்கு:** வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. காரிய தாமதம் ஏற்பட்டாலும் சாதகமான பலன்கள் கிடைக்கும். எதிர்பார்த்த காரியங்கள் தடைகளின்றி முடியும். எதிர்ப்புகள் மறையும்.

**அரசியல் துறையினருக்கு:** பகை பாராட்டியவர்கள் பகையை மறந்து நட்புக் கரம் நீட்டுவார்கள். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சினைகள் குறையும். மன உறுதி அதிகரிக்கும். சொத்துகளை அடைவதில் தடைகள் ஏற்படும்.

**மாணவர்களுக்கு:** கல்வியில் கூடுதல் மதிப்பெண் பெற முயற்சியெடுத்துப் படிப்பீர்கள். முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**மகம்:** இந்த மாதம் அனுபவபூர்வமான அறிவைக் கொண்டு எதையும் சாதிப்பீர்கள். வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நன்மை தரும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடையத் தேவையான உதவிகள் கிடைக்கும். பொறுப்புகள் அதிகரிக்கும். காரிய வெற்றி உண்டாகும். மனமகிழ்ச்சி கூடும். காரியத்தடை தாமதம் நீங்கும். வழக்கு விவகாரங்கள் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும். எதிர்ப்புகள் விலகும். பொருளாதாரம் உயரும். நினைத்த காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள்.

**பூரம்:** இந்த மாதம் வீண்கவலை விலகும். அடுத்தவர் விஷயங்களில் தலையிடுவதைத் தவிர்க்கவும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் பங்காளியை அனுசரித்துச் செல்வது நல்லது. வியாபாரப் போட்டிகள் குறையும். எல்லாத் துறைகளிலும் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எதைப் பற்றியும் கவலைப்படாமல் செயலாற்றுவார்கள். வேலை பார்க்கும் இடத்தில் இருந்த பிரச்சினைகள் தீரும். குடும்பத்தில் சுபகாரியம் நடக்கும். திருமண முயற்சிகள் சாதகமான பலன்களைத் தரும். சிலருக்கு புத்திர பாக்கியம் உண்டாகும்.

**உத்திரம் 1ம் பாதம்:**
இந்த மாதம் தம்பதியர் ஒருவரது பேச்சை மற்றவர் கேட்பதன் மூலம் நன்மை உண்டாகும். பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எடுத்த காரியத்தை திறமையாக செய்து முடித்து பாராட்டு பெறுவீர்கள். தடைகள் விலகும். பணவரத்து திருப்திதரும். மாணவர்களுக்கு கல்வி பற்றிய கவலை விலகும். விளையாட்டுப் போட்டிகளில் சாதகமான பலன்கள் கிடைக்கும். விடுமுறையில் மகிழ்ச்சியான பொழுது போக்கில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்த்த காரிய வெற்றி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும்.

## மக்களின் அனுமதியின்றி தீர்மானம் எடுக்க இயலாது!

*கொழும்பு கிழக்கு முனையம் தொடர்பில் தேசிய ஒன்றிணைந்த குழு அறிக்கை*

கொழும்பு. ஜன.7
நாட்டின் பொது உடைமைகள் தொடர்பில் அரசாங்கம் சார்பாக தீர்மானங்களை எடுப்போர், அவற்றின் உண்மையான உரிமையாளர்களான நாட்டின் பிரஜைகளிடம் கேட்டறியாமல் முடிவுகளை எடுப்பது நாட்டின் அரசமைப்பை மீறும் செயல் என தேசிய ஒன்றிணைந்த குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்திய நிறுவனமொன்றுக்கு குத்தகைக்கு வழங்கும் திட்டம் தொடர்பில் அதிருப்தியை வெளியிட்டு அந்தக் குழு விடுத்துள்ள அறிக்கையில், அரசமைப்பின் 28(டி) சரத்துக்கமைய, பொது உடைமைகளைப் பாதுகாக்க வேண்டியது நாட்டின் அனைத்துப் பிரஜைகளினதும் பொறுப்பாகும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், கொழும்பு துறைமுகத்தில் இடம்பெறுகின்ற இடையீட்டு பொருள்கள் போக்குவரத்து நடவடிக்கைகளை அகற்றும் நிலையான நோக்கத்துடன் குறித்த இந்திய நிறுவனம் இந்த கொடுக்கல் வாங்கலில் தலையீடு செய்துள்ளது.

இந் நிறுவனம் கொழும்பு துறைமுகத்தின் மேம்பாட்டுக்காக செயற்படும் என எதிர்பார்க்க முடியாது. குறித்த ஆவணத்தில் உள்ள பிணைப்புக்கள் காரணமாக இந்திய நிறுவனத்துடன் இணைந்து கிழக்கு முனைய அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என முன்வைக்கப்படுகின்ற கருத்துக்கள் அடிப்படையற்றவை என தேசிய ஒன்றிணைந்த குழு அறிவித்துள்ளது. (ந)

## யாழில் சைவ உணவகம் தனிமைப்படுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன. 7
யாழ்ப்பாணம் நகரில் உள்ள சைவ உணவகமொன்று சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டது.
புலோலிப் பகுதியில் கொரோனா தொற்றுக்குள்ளான நபர் கடந்த டிசெம்பர் 31ஆம் திகதி மேற்படி உணவகத்துக்கு வந்து சென்ற தன் காரணமாகவே இந்த உணவகம் நேற்று காலையிலிருந்து தனிமைப்ப டுத்தப்பட்டுள்ளது. (ஒ.20)

## உக்ரைன் சுற்றுலாவிகளால் கொரோனா நான்காம் அலை

*எம்.பி ஜேசி அலாவத்துல்ல தெரிவிப்பு*

கொழும்பு, ஜன.7
உக்ரைன் சுற்றுலாப்பயணிகள் மூலம் நாட்டுக்கு நான்காம் அலையை அரசாங்கம் வரவேற்றுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜேசி அலாவத்துல்ல தெரிவித்துள்ளார்.

தொற்றுக்குள்ளான உக்ரைன் சுற்றுல்லாப் பயணிகள் புதிய வீரியமிக்க கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

மத்தள விமானநிலையத்தில் சுற்றுலாப்பயணிகள் வந்துசேர்ந்த வேளை அதனை அரசாங்கம் மிகப்பெரும் நிகழ்வாக காண்பித்தது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

நீத்தார் நயப்புரை

## சிறந்த வங்கியாளர் அல்பிரட் ஜெபா

மட்டுவிலில் பிறந்து, நவாலியூரில் வாழ்ந்த சிறந்த வங்கியாளர் அல்பிரட் ஜெபா கதிர்காமர் (13.12.2020) தனது 66 வயதில் மறைந்தார்.

யாழ்ப்பாணம் கொமர்ஷல் வங்கியின் அதிகாரியாக பணியாற்றய ஜெபா, வங்கியில் கடமையாற்றும் போது அங்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு இன்முகத்துடன் சேவையாற்றும் பண்பு கொண்டவர்.

தான் வாழும் காலத்தில் ஏழைகளுக்கு உயர் சேவை்யைச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை மட்டும் அவர் கொண்டிருந்தது மட்டுமல்லாது, அதனைச் செயல் உருவில் நிலைநிறுத்திய பெருந்தகையாளனாகவும் காணப்பட்டார்.

வங்கிச் சேவையில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் தன்னை முழுமையாக சமூக சேவையில் ஈடுபடுத்தி பாடசாலைகள், பொது அமைப்புக்கள், சனசமூக நிலையங்களுக்குத் தேவையான உதவிகளை மனமுவந்து வழங்கி அபிவிருத்தியின் பங்காளியாக செயற்பட்டு வந்தார்.

உதவும் உள்ளம் கொண்ட அல்பிரட் ஜெபா கதிர்காமர் இந்த மண்ணை விட்டு விரைந்து சென்றது வலி. தென்மேற்கு நவாலி மக்களைப் பெரிதும் பாதித்துவிட்டது. இவரது ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்போம்.

*செல்வராஜா ரமேஷ்,நவாலி*

## இன்றைய நாள்

**மேடம்:** மனம் அவசரமாக செயல்படத் தோன்றும். ஆனால் பதற மாட்டீர்கள். நிதானமான போக்கு வெற்றிக்கு வழிவகுக்கும் என்று உணர்வீர்கள். திறமைகள் வெளிப்படுவதால் பாராட்டு வரும்..

**இடபம்:** உங்களது பேச்சில் கோபம் தெரியாத அளவு பக்குவம் இருக்கும். முன்பிருந்த வீண் அலைச்சல் குறையும். வாய்ப்புகள் அதிகரிக்கும். சவாலானவைகளை செய்து முடிப்பீர்கள்..

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் வரும். சமூகத்தில் செல்வாக்குக் கூடும். முன்பிருந்த கோபம் மாறி உடன்பிறந்தோர் உதவி செய் வார்கள். பொருளாதார சிக்கல்களை சமாளிப்பீர்கள்.

**கடகம்:** இன்று மகிழ்ச்சியான நாளாக அமையும். பகைவரின் மனம் மாறும். சில ஆச்சரியங்கள் உங்களைத் தேடி வரும். பழைய கடன் தீரும். பிரச்னைகளில் சுமுகமான முடிவை காண்பீர்கள்.

**சிம்மம்:** முந்தைய கடமை ஒன்றை நன்கு முடித்து நிம்மதி காண்பீர்கள். தந்தை வழி சொத்து வழக்குகள் இருந்தால் சாத கமாக முடியும். மனதுக்கு இனிய சம்பவங்கள் நடக்கக்கூடும்..

**கன்னி:** தேவையற்ற கற்பனையால் தடுமாற்றம் அடையாதீர்கள். இன்று அனைத்திலும் கவனமாக இருந்து வெற்றி பெறுவீர்கள். உங்களின் தொடர்புகள் விரிவடையும். தேவைகள் நிறைவேறும்.

**துலாம்:** உங்களுக்கு ஏற்பட்ட பிரச்னைகளில் நல்லதொரு திருப்பம் ஏற்படும். கவனக் குறைவால் முன்பு ஏற்பட்டிருந்த கஷ்டங்கள் தீரும். பிள்ளைகள் உங்களின் மனம் குளிரும்படி நடந்து கொள்வர்.

**விருச்சிகம்** வாழ்க்கைத் துணை மூலம் பெற்றோருக்கு ஆதாயம் உண்டு. இக்கட்டான சூழலில் நண்பர்கள் மூலம் பண உதவி கிடைக்கும். நன்மைகள் அடுத்தடுத்து நடக்கும்.

**தனுசு** பணியாளர்கள் அனைத்து செயல்களிலும் வெற்றிகளை காண்பீர்கள். வாக்குவாதங்களில் உங்களுக்கு நிறைய ஆதரவுகள் கிடைக்கும். பிரச்சினைகளிலிருந்து மீள்வீர்கள்.

**மகரம்** இன்று உற்சாகமாக பொழுது போகும். தைரியம் கூடும். மனசாட்சிபடி செயல்படுவீர்கள். மனம் மகிழும் நாள். பல நாளாக தள்ளிப்போட்ட வேலைகளை இன்று முடிப்பீர்கள்.

**கும்பம்:** மனதுக்கு நெருக்கமானவரின் ஆதரவால் உற்சாகம் ஏற்படும். பெரிய அளவில் இல்லாவிடிலும் சிறு சாதக அலை இருக்கும். தாயாருடன் இருந்த நெருக்கமும், அன்பும் கூடுதலாகும்.

**மீனம்:** புதிய வேலைக்காக செய்த முயற்சிகள் வெற்றி பெறும் நாள். உங்களின் மனதுக்கு பிடித்தவர்கள் உதவிகரமாக இருப்பார்கள். துணிச்சலான செயலுக்காக அனைவராலும் போற்றப்படுவீர்கள்.

# முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய அனுமதியுங்கள்

### யாழ். மாவட்ட சர்வமத பேரவை கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஜன. 7**

**கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச்விடம் கோரியுள்ளது யாழ்ப்பாண மாவட்ட சர்வமத பேரவை.**

இது தொடர்பில் அவர்கள் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

கொரோனாவால் இறந்தவர்களை தகனம் செய்யும் நடவடிக்கை கொரோனாத் தொற்று பரவுதலை தடுப்பதற்கு எனும் கருத்து நிலைப் பாடு இன்று கேள்விக்குள்ளாக்கப் படுகிறது. உலக சுகாதார நிறுவனத் தின் நிலைப்பாடு மற்றும் பல உலக நாடுகளின் நிலைப்பாட்டின்படி இறந்தவருடைய உடலை அடக்கம் செய்வதால் (புதைத்தல்) கொரோ னாத் தொற்று பரவ வாய்ப்பில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள் ளது. இதனால் விரும்புகின்றவர்கள் அவர்களது இறந்த உறவை நல்ல டக்கம் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும் என நாம் கருதுகிறோம். முஸ்லிம் மக்கள் தமது சமய நம் பிக்கையின் பிரகாரம் உடலம் புதைக்கப்பட வேண்டும், அதனை தீயிலிடக் கூடாது. கடவுள் மாத்திரமே தனது தண்டனையாக அதனை வழங்கக்கூடும். பறவைகள், மிரு கங்கள், ஜந்துக்கள் உட்பட மனிதர் கள் தீயினால் துன்பப்படுத்தக் கூடாது என்பது நம்பிக்கையும் போதனையும் ஆகும்.

இலங்கையில் சிறுபான்மையி னரும் மதிக்கப்படவேண்டும் எனும் கருத்துநிலைப்பாட்டின்படி, இஸ்லா மியர்கள் அவர்களது இறந்த உற வுகளை அடக்கம்செய்யும் (ஜனாஸா) சமயக் கடமையை செய்ய உரிய வசதிப்படுத்தலை மேற்கொள்ள வேண்டும். இலங்கையில் இனங் கள் மற்றும், மதங்களுக்கிடையே நல் உறவை வளர்க்க இது உதவும் அதனைத் தடுத்து அவர்களுடைய சமய உரிமைகளை மீறக்கூடாது.

கொரோனாத் தொற்று பரவ ஏது வான எதனையும் மேற்கொள்ளக் கூடாது எனும் நிலைப்பாட்டை மீளவும் உறுதி செய்கிறோம். அடக் கம் செய்தல் கொரோனா அச்சுறுத் தல் ஏற்பட வழிவகுக்காது என்ப தால் இஸ்லாமியர்கள் அவர்களு டைய இறந்த உறவுகளை அடக்கம் செய்ய உரிய அனுமதியை உடன டியாக வழங்கி மனித நேயத்தைப் பேண நடவடிக்கையெடுக்கும்படி கோரிக்கை விடுக்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ)

## நாட்டின் சட்டத்தில் பாகுபாடு இதுவா தேசிய நல்லிணக்கம்?

*சுரேன் ராகவனிடம் மனோ கேள்விக்கணை*



கொழும்பு, ஜன.7

இந்த நாட்டில் நல்லிணக் கம் எங்கே இருக்கிறதெ னக் கேள்வியெழுப்பிய நாடாளுமன்ற உறுப்பி னர் மனோ கணேசன், இல்லாத ஒன்றுக்காக மாரடிக்க வேண்டாமென ஆளுங்கட்சியின் நாடா ளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவனிடம் கோரியுள்ளார்.

மேலும், நல்லாட்சியில் நான் வகித்த நல்லிணக்க அமைச்சை இந்த அரசாங்கம் முற்றாகவே அழித்து விட்டது. கனடா, ஒன்ராறியோ நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட சட்டவரைபு, இலங்கையில், தேசிய நல்லிணக்க ஒருமைப்பாட்டை அழிக்கின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் தெரிவித் துள்ளார். கனடா சட்டம் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், இந்த நாட்டில் எங்கே ஐயா, நல்லிணக்கம் இருக்கிறது? என சுரேன் ராகவனிடம் கேள்வியெழுப் பினார்.

அத்துடன் 'ஒரே நாடு ஒரே சட்டம்' என உங்கள் அர சாங்கம் சொல்கிறது. ஆனால் உங்கள் சட்டம் சிங்க ளவருக்கு ஒன்று, தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் ஒன்றென அல்லவா இருக்கிறது. இதுவா தேசிய நல் லிணக்கம்?, இந்த அரசாங்கத்தில் இல்லாத ஒன்றுக் காக மாரடிக்க வேண்டாமெனவும் சுரேன் ராகவனிடம் கேட்டுக்கொண்டார். (ந-இ)

## ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி 726 பில்லியன் ரூபாவாக கடன் மதிப்பு அதிகரிப்பு



கொழும்பு, ஜன.7

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள் ளதால் 2021 ஆம் ஆண்டில் 726 பில்லியன் வெளிநாட்டுக் கடனை வழங் கும் நிலைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பின ரான எஸ்.எம்.மரிக்கார் நாடாளுமன் றில் நேற்று எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கியபோதே அவர் இதனைத் தெரி வித்தார். ரூபாவின் பரிமாற்ற வீதம் சீராக இல்லாமையால் கடனின் மதிப்பு அதிகரித்துள்ளது எனவும் அவர் சுட்டிக் காட்டினார். அமெரிக்க டொலருக்கு நிக ரான இலங்கை ரூபாவின் விற்பனை விலை 191 ரூபாவாக காணப்படுகின் றமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## அறநெறி பாடசாலைகள் 17ஆம் திகதி ஆரம்பம்

கொழும்பு, ஜன. 7

அறநெறி பாடசாலைகள் எதிர்வரும் 17ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப் படவுள்ளன எனத் தெரிவிக்கப்படு கின்றது.

தனிமைப்படுத்தப்பட்ட பகுதி களைத் தவிர நாட்டின் ஏனைய பகுதிகளில் எதிர்வரும் 17ஆம் திகதி முதல் அறிநெறி பாடசாலைகள் திறக் கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்ப டுகின்றது. (ஒ.இ)

# மருத்துவமனைக்கு எதிரே உயர் கதிர்வீச்சு கோபுரம்

## மன்னார் மக்கள் அச்சம்

மன்னார், ஜன. 7
மன்னார் பொது மருத்துவமனைக்கு முன்னால், நுழைவாயிலுக்கு எதிரே அதிஉயர்கதிர்வீச்சைக்கொண்ட தொலைத் தொடர்புக் கோபுரம் அமைக்கப்படுவது தொடர்பில் மாவட்டத்தைச் சேர்ந்த பலரும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.
ஒரு வருடத்துக்கு முன்பாக மன்னார் பொது மருத்துவமனைக்கு முன்பாக உயர் கதிர்வீச்சைக் கொண்டது எனக் கூறப்படும் தொலைத்தொடர்புக் கோபுரம் ஒன்று அமைக்கப்படுவதற்கான முன்னெடுப்புக்கள் இடம்பெற்றன.
இது தொடர்பில் மக்கள் மன்னார் நகர சபை உறுப்பினர்களின் கவனத்துக்கு கொண்டு வந்தனர். இதன்போது அந்தக் கோபுரம் அமைக்கும் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் இதுவிடயமாக மன்னார் நகர சபையின் மாதாந்த கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது. மன்னார் நகர சபை உறுப்பினர்களுக்கு அந்தக் கோபுரம் தொடர்பான விளக்கங்கள் போதிய அளவு இல்லை என்றும், மாவட்ட பொறியியலாளர் சங்கத்திடம் ஆலோசனைகள் பெற்றபின் அது தொடர்பாக ஆராய்ந்து முடிவெடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது எனினும் கோபுரத்தை அமைக்க தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் மக்கள் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். மருத்துவமனைக்கு முன்பாக இந்தக் கோபுரம் அமைக்கப்படுவதால் கர்ப்பிணித் தாய்மார்கள் தாம் பாதிக்கப்படக் கூடும் அச்சப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. அத்தோடு இது தொடர்பில் உரியவர்கள் தகுந்த விளக்கங்களை வழங்கவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. (ப-60)

# உலகளவில் இறப்பு விகிதம் இலங்கையில் மிகக்குறைவு

## உலக சுகாதார ஸ்தாபனம் பாராட்டு

**கொழும்பு,ஜன. 7**

**உலகளவில் ஒப்பிடும்போது இலங்கையின் இறப்பு விகிதம் (0.5%) மிகக் குறைவாகவுள்ளது. அத்துடன் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் இலங்கை சிறப்பாகச் செயற்படுகின்றது என்று உலக சுகாதார ஸ்தாபனம் பாராட்டுத் தெரிவித்துள்ளது.**

World Health Organization

ஒக்ரோபர் மாதத்திலிருந்து கொரோனாத் தொற்று அதிகரித்துள்ள போதிலும், தற்போது அடையாளம் காணப்படும் நோயாளிகள் ஒப்பீட்டளவில் குறைவாகவுள்ளனர்.
கடந்த மூன்று மாதங்களில் கொரோனாத் தொற்றால் 200 க்கும் மேற்பட்ட இறப்புகளுடன், 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நோயாளிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
வலுவான பொதுச் சுகாதார நடவடிக்கைகள், பரிசோதனை மற்றும் தனிமைப்படுத்துதல் நடவடிக்கைகளை இலங்கை அரசு அக்கறையுடன் மேற்கொண்டு வருகின்றமையே இதற்குக் காரணம் என்று சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.
ஏறக்குறைய ஒரு வருடம் முன்பு கொரோனாத் தொற்று நாட்டில் பரவத் தொடங்கியதிலிருந்து 38 ஆயிரம் இலங்கையர்கள் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-இ)



கொடிகாமம் ஒட்டடங்கேணி சனசமூக நிலையத்தின் பொது அங்கத்துவக் கூட்டம் சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் மற்றும் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் முன்னிலையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. (ஐ-159)

# சாவகச்சேரி நீதிமன்றால் மூவருக்கு தண்டனை

சாவகச்சேரி,ஜன.7
கூரிய ஆயுதத்தால் வெட்டிக் காயப்படுத்திய இருவருக்கும், கசிப்பை உடைமையில் வைத்திருந்த ஒருவருக்கும் சாவகச்சேரி நீதிமன்றால் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாத சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.
கடந்த 2015 ஆம் ஆண்டு பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.'
நாவற்குழி பாடசாலைக்கு அருகில் ஒருவரைக் கூரிய ஆயுதத்தால் வெட்டிக், காயப்படுத்திய இருவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. விசாரணைகளின் பின்னர் இருவரும் குற்றவாளிகளாகக் காணப்பட்ட நிலையில் இருவருக்கும் தலா ஆயிரத்து 500 தண்டம் விதித்து, ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாத கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.
இதேவேளை சாவகச்சேரி சரசாலைப் பகுதியில் ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த நபருக்கு' எதிராக பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. விசாரணையின்போது குற்றவாளியாகக் காணப்பட்ட குறித்த நபருக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாத கால சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. (ஐ-9)

# வர்த்தமானி அறிவித்தலால் ஆயிரம் கோடி ரூபா மோசடி

கொழும்பு,ஜன.7
சீனிக்காக நிர்ணயிக்கப்பட்டிருந்த வரி மாற்றம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஊடாக, ஆயிரம் கோடி ரூபாவுக்கும் அதிகமான பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது.
அது தொடர்பில் துரிதமான விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் உறுப்பினர் வசந்த சமரசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.
நிதி அமைச்சால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் காரணமாக அரசுக்குக் கிடைக்க வேண்டிய பெருந்தொகையான வரிப்பணம் கிடைக்காமல் போயுள்ளது.
வர்த்தமானி அறிவித்தலை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, அரசுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ள இறக்குமதியாளர்கள் இலாபமீட்டியுள்ளனர்.
அரச நிறுவனங்களின் உயர் அதிகாரிகளுடன் இணைந்து 1000 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தை இவர்கள் மோசடி செய்துள்ளனர். 85 ரூபாவுக்கு சீனியை விற்பனை செய்யுமாறு விடுக்கப் பட்ட உத்தரவுக்கமையவே, இந்த மோசடி இடம்பெற்றுள்ளன. இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு ஆணைக்குழுவிலும் இது குறித்து முறைப்பாடு அளிக்கவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

# கண்டி—திகன நில அதிர்வுகளால் நீர்த்தேக்கத்துக்கு பாதிப்பில்லை

## அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

கண்டி,ஜன.7
கண்டி - திகன பகுதியில் அண்மைக்காலங்களில் ஏற்பட்ட நில அதிர்வுகளால் விக்ரோரியா நீர்த்தேக்கத்துக்கு பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படுவதற்கான வாய்ப்பில்லை என்று சுற்றாடல் துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.
அண்மைக் காலங்களில் குறித்த பகுதியில் ஏற்பட்ட நில அதிர்வு குறித்து ஆராய்



வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை அமைச்சரிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது. இதன் பின்னர் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மஹிந்த அமரவீர இவ்வாறு தெரிவித்தார். (ஐ-இ)

# நிறுவனத்துக்கு வந்தோர் தொடர்புகொள்ளவும்

நெல்லியடி டயலொக் நிறுவனத்தில் சேவைகள் பெறுவதற்காக வந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து கடந்த 30 ஆம் திகதி குறித்த நிறுவனத்துக்கு வந்த அனைவரும் 021 226 1006 அல்லது 021 222 6666 இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையால் அறிவிக்கப்பட்டுள்ளது.
கொரோனாத் தொற்றுக்குள்ளான ஒருவர் காலை 10.30 மணி முதல் ஏறத்தாழ ஒரு மணித்தியால நேரம் வரை அங்கு இருந்துள்ளார். அத்துடன் அங்கு வருகைதந்தோர் தொடர்பான சி.சி.ரி.வி. பதிவுகளும் பெறப்பட்டுள்ளன.
கொரோனாத் தொற்றுத் தொடர்புகளை மறைப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே சம்பந்தப்பட்டோர் மேற்குறிப்பிட்ட தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-159)

# யாழில் இருந்து ஹற்றனுக்கு அரச பேருந்துச் சேவை வேண்டும்

யாழ்ப்பாணம், ஜன. 7

யாழ்ப்பாணத்திலிருந்து ஹற்றனுக்கான அரச பேருந்துச் சேவைகளை நடத்த வேண்டுமென யாழ்ப்பாண மாவட்ட அரச திணைக்களங்கள், மற்றும் நிறுவனங்களில் பணியாற்றும் ஹற்றனைச் சேர்ந்த அலுவலர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.



இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

ஹற்றன் பகுதிகளைச் சேர்ந்த அரச அலுவலர்கள் மற்றும் வர்த்தகர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அரச அலுவலகங்களிலும், தனியார் நிறுவனங்களிலும் வர்த்தக நிலையங்களிலும் பணியாற்றி வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து ஹற்றனுக்கு தனியான அரச பேருந்துச் சேவை இல்லாததால் பயணிகள் மூன்று அல்லது நான்கு பேருந்துகளில் பயணித்து தமது சொந்த இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. தற்போது தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபடுகின்ற போதிலும் அரச பேருந்துகள் சேவையில் ஈடுபட்டால் அரச இலவசப் பயணச்சீட்டைப் பெற்று பயணிக்க முடியும். தற்போது தனியார் பேருந்துகளில் அதிக கட்டணம் செலுத்தி பயணிக்க வேண்டியுள்ளது என்றனர். (ப-9)

# நிதியத்தை உருவாக்கியேனும் இலங்கையரை வரவழைப்போம்

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு, ஜன.7

நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதியம் ஒன்றை ஏற்படுத்தியேனும் வெளிநாட்டுத் தொழிலாளர்களை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறு இல்லாமல் அவர்களின் சொந்தப் பணத்தில் வருமாறு தெரிவிப்பது அவர்களுக்குச் செய்யும் பெரும் துரோகமாகும் என்று எதிர்க்கட்சி உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஜனாதிபதி தேர்தலில் வெளிநாட்டுத் தொழிலாளர்களை அழைத்துவந்து வாக்களிக்கச் செய்தார்கள். அப்போது அவர்களை நாட்டு வீரர்கள் என்றே இந்த அரசு பரப்புரை செய்துவந்தது. ஆனால் இன்று அந்த வீரர்களை அரசு மறந்து செயற்படுகின்றது. டுபாயில் இருந்து வருபவர்கள் அவர்களின் சொந்தப் பணத்தில் 15 மில்லியன் ரூபா செலுத்தியே வருகின்றனர். கடந்த டிசெம்பர் மாத ஆரம்பத்தில் சவூதி அரேபியாவில் இருந்து 3 ஆயிரத்து 500 பேர் நாட்டுக்கு வர எதிர்பார்த்திருந்தனர். ஆனால் அவர்கள் நாட்டுக்கு வருவதாக இருந்தால், ஹொட்டல்களில் தனிமைப்படுத்திக்கொள்ள முடியுமாக இருந்தால் சொந்தப் பணத்தில் வரலாம் என்றே அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு ஆயிரத்து 800பேர் வந்திருக்கின்றனர். இது மிகவும் அநியாயமாகும் என்றார். (ஐ-இ)

# அரசியல் கைதிகளைத் தொடர்ந்து சிறை வைத்திருப்பது அநியாயம்

## பங்குத்தந்தை அருளானந்தம் ஜாவீஸ் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜன.7

போராட்டத்தில் பங்கெடுத்த எத்தனையோ பேர் மறுவாழ்வளிக்கப்பட்டு, இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியுள்ள நிலையில், குறிப்பிட்டளவு தமிழ் அரசியல் கைதிகளை மாத்திரம் கொடூரமான முறையில் சிறையில் அடைத்து வைத்திருப்பது அநீதியானதும், மனிதாபிமானம் அற்ற செயலுமாகும் என்று முல்லைத்தீவு பங்குத்தந்தை அருளானந்தம் ஜாவீஸ் தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி, முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு மேலும் தெரிவித்த அவர்;

நாங்கள் எங்களுடைய தமிழ் அரசியல் கைதிகளின் விடுவிப்புத் தொடர்பிலே அதிக கரிசனையுடன் இருக்கின்றோம். ஏனெனில் அவர்கள் இந்த இலங்கை அரசால் சிறப்பாக உருவாக்கப்பட்டதொரு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்கள். அவர்களுக்கு நிச்சயமாக மறுவாழ்வளித்து, விடுதலை செய்யவேண்டியது கட்டாயமானது. ஆகவே அவர்களை விசாரணைக்கு அழைப்பது, விசாரணை முடிந்தால் விடுதலைசெய்வது அல்லது அதற்கு மேலாக புனர்வாழ்வை வழங்கி பொதுமன்னிப்பளிப்பதென்பது கட்டாயமானது என்றார். (ப-246)

# சங்கிலி அறுத்தவருக்கு தண்டம்

சாவகச்சேரி, ஜன. 7

வீதியால் சைக்கிளில் சென்ற பெண் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்த கெற்பேலியைச் சேர்ந்த ஒருவருக்கு ஐந்து வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாதச் சிறைத் தண்டனையும், தண்டமும் விதிக்கப்பட்டது.

கடந்த 2019ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதி கச்சாய்ப் பகுதியில் சைக்கிளில் சென்ற பெண் ஒருவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்து அறுத்தார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட நபருக்கே இவ்வாறு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி நீதிவான் மன்றில் நேற்று வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது விசாரணைகளில் குற்றம் நிரூபிக்கப்பட்டதால், அவருக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாதச் சிறைத்தண்டனையும் ஆயிரத்து 500 ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது. (ப-9)

# கொரோனாத் தொற்று: இருவருக்கு உதவி

சாவகச்சேரி, ஜன. 7

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட வங்கி வாடிக்கையாளர் இருவருக்கு ஹற்றன் நஷனல் வங்கியின் சாவகச்சேரி கிளையால் தலா ஒரு லட்சம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வு எதிர்வரும் 13ஆம் திகதி புதன்கிழமை வங்கி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் தென்மராட்சி பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர், சாவகச்சேரி கால்நடை மருத்துவர் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-9)

# மஞ்சள் கடத்திய இருவர் கைது

கொழும்பு, ஜன.7

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கடத்தப்பட்ட மஞ்சள் பொதியுடன் இரண்டு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து ஆயிரத்து 128 கிலோ கிராம் மஞ்சள் கைப்பற்றப்பட்டது என பொலிஸ் நிலைய ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை, மஞ்சளைக் கடத்துவதற்கு பயன்படுத்திய பாரவூர்தி ஒன்றும் கைப்பற்றப்பட்டது என பொலிஸார் தெரிவித்தனர். (ரி5)

# வர்த்தகர்களுக்கு தண்டம்

சாவகச்சேரி, ஜன. 7

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபாரத்தில் ஈடுபட்ட தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த ஐந்து வர்த்தகர்களுக்கு நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் 9 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையால் சாவகச்சேரி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன. விசாரணையின் பின்னர் ஒருவருக்கு 3 ஆயிரம் ரூபாவும் நால்வருக்கு தலா ஆயிரத்து 500 ரூபா வீதமும் தண்டம் விதிக்கப்பட்டது. (ப-9)



# மஹ்ரூப் பிணையில் விடுவிப்பு

கொழும்பு, ஜன.7

முன்னாள் பிரதி அமைச்சரும், திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அப்துல்லா மஹ்ரூப் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டார்.

லங்கா சதொசவுக்குச் சொந்தமான வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்தியமை தொடர்பில், கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் இவர் கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். (க-இ)



# காலபோக செய்கையின் அறுவடை ஆரம்பம்

கிளிநொச்சி, ஜன. [illegible]

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடு நீர்ப்பாசன வழங்கலின் கீழ் மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற்பயிர்ச் செய்கையின் அறுவடை ஆரம்பித்துள்ளது. எனினும் மழை வெள்ளத்தால் ஏற்பட்ட அழிவு காரணமாக அறுவடை செய்யப்படும் நெல்லின் அளவில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் தெரிவித்துள்ளார்.

அறுவடைசெய்யப்படும் சம்பா கிலோ 52 ரூபாவாகவும், சிவப்புநாடு வெள்ளை நாடு நெல்லினங்கள் கிலோ 50 ரூபாவாகவும் வியாபாரிகளால் கொள்வனவுசெய்யப்படுகின்றன என்றும் விவசாயிகள் தெரிவித்தனர். (ப-[illegible])

# மாணவர்களின் உளவிருத்தி செயற்பாடுகளை கவனிக்குக

## மருத்துவர் யமுனாநந்தா ஆலோசனை

யாழ்ப்பாணம்,ஜன.7

**பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிக்கும்போது, மாணவர்களுடைய உளவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் அதிக அக்கறை செலுத்த வேண்டும் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவித்ததாவது, மாணவர்களின் கல்வி கடந்த வருடம் பெருமளவில் பாதிப்படைந்துள்ளது. மீண்டும் பாடசாலைகளை ஆரம்பிக்கும் போது, தனிநபர் இடைவெளியைப் பேணுதல், முகக்கவசம் மற்றும் கை கழுவுவது தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கடைப்பிடித்தல் அவசியம்.

கொரோனாக் காலத்தில் இழந்த கற்றல் செயற்பாடுகள் மீட்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் மாணவர்களுக்கான விசேட கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்தல் அவசியம்.

பின்தங்கிய கிராமப்புறங்களைச் சேர்ந்த மாணவர்கள் "சூம்" தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க வில்லை. அதனால் தொழில்நுட்பத்தைப்பயன்படுத்தாத மாணவர்கள் தொடர்பிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். முன்னைய காலங்களைவிட இரண்டு மடங்காக நேரத்தை விளையாட்டுக்கு ஒதுக்குவதன் மூலம் அவர்களுடைய உளவிருத்திச் செயற்பாட்டை அதிகரிக்க முடியும். மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய உள மற்றும் சமூகத் தாக்கங்கள் தொடர்பிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். என்றார். (சு-111)

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்த நாளை முன்னிட்டு இக் கவிதை இன்று பிரசுரமாகிறது.



## "சிவபூமியைத் தவமாக்கினார்"

அறப்பெருந்தேவியே அன்னை தங்கம்மாவே
சிறப்போடு பேறக்கினார் துர்க்கையை - பொறுப்புடன்
தருமமே கண்ணாகச் சிவபூமியைத் தவமாக்கிப்
பெருகவே வழி சமைத்தார்


சிவத்தமிழ்ச் செல்வியாய் கலாநிதி அன்னையாய்த்
தவநிறைச் செல்வியே தங்கம்மா - குவலயக்
கோமகளாய் ஆன்ம விடுதலைக்காய் வரம்
நாமகளாய் ஈந்தார் நமக்கு.

கே.எஸ்.சிவஞானராஜா

# மன்னார் பஸ் நிலையத்தில் எழுந்தமானப் பரிசோதனை

மன்னார்,ஜன.7

மன்னார் புதிய பஸ் நிலையத்தில் நேற்று எழுந்தமானமாக பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. சாரதிகள், நடத்துநர்கள் மற்றும் உணவகம், வர்த்தக நிலையங்கள் போன்றவற்றில் கடமையாற்றுபவர்கள், பயணிகள் என பல தரப்பட்டவர்களிடம் எழுந்தமானமாகப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.



மன்னார் எருக்கலம் பிட்டிக் கிராமத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்தே இத்தகைய எழுந்தமானப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இராணுவம் மற்றும் பொலிஸாரின் ஒத்துழைப்புடன், மன்னார் மாவட்ட தொற்றுநோய் விஞ்ஞானப்பிரிவினர் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து பரிசோதனையை மேற்கொண்டனர். சுமார் 200 க்கும் மேற்பட்டவர்களுக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. (சு-56)

# முதலை இழுத்துச் சென்ற மீனவர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, ஜன.7

மட்டக்களப்பு பெரிய உப்போடை பகுதியிலுள்ள வாவியில் மீன்பிடிக்கச் சென்று காணாமல்போனவர் சடலமாக நேற்று முன்தினம் கண்டெடுக்கப்பட்டுள்ளார். புன்னைச்சோலையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஆரோக்கியநாதன் மரியதாஸ் (48 வயது) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் இரவு 12 மணியளவில், மட்டக்களப்பு வாவிப்பகுதியில் மீன்பிடிக்கச்சென்ற போது முதலையால் இழுத்துச்செல்லப்பட்டு, சின்ன உப்போடையில் உள்ள களப்பு ஒன்றுக்குள் அமிழ்த்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் மீனவர்களால் அவரது சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. மேலும் அண்மைக்காலமாக மட்டக்களப்பு வாவியில் முதலைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது என அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (வ-இ)

# ஐங்கரநேசனின் வியாக்கியானம் வேடிக்கையானது

## உறுப்பினர் மதுசுதன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.7

நல்லூரில் கூட்டமைப்பைத் தோற்கடித்த பின் கூட்டமைப்புக்கு எதிராக, உறுப்பினர்கள் இருவரை வாக்களிக்கச் செய்துவிட்டு புதிய வியாக்கியானத்தை, ஐங்கரநேசன் கூற முற்படுவது வேடிக்கையானது என்று நல்லூர் பிரதேசசபை உறுப்பினர் மதுசுதன் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் தேர்வின்போது தவிசாளர் பதவிக்குப் போட்டியிட்ட மதுசுதனுக்கு எதிராக தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் இரண்டு உறுப்பினர்கள் வாக்களித்தனர். அது தொடர்பில் ஐங்கரநேசன் அண்மையில் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். அந்த அறிக்கை தொடர்பில் மதுசுதனும் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது; தவிசாளர் தெரிவில் கூட்டமைப்பை ஆதரிக்கும்படி கூட்டமைப்பு சார்பிலும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் சார்பிலும் அதன் தலைவரும், தேசிய அமைப்பாளரும் தங்களைக் கோரியிருந்தார்கள். எனினும் அந்தக் கோரிக்கைகள் எல்லாவற்றையும் நிராகரித்து நல்லூரில் கூட்டமைப்பைத் தோற்கடித்த பின் கூட்டமைப்புக்கு எதிராக தாங்கள் தங்கள் உறுப்பினர்கள் இருவரை வாக்களிக்கச் செய்ததற்கு புதிய வியாக்கியானங்களைக் கூற முற்படுவது வேடிக்கையானதாகவே இருக்கிறது என்றுள்ளது (ப)

# மதுபோதையில் சாரத்தியம்; 7பேருக்கு ரூ.2,25,000 தண்டம்

## ஐவரின் சாரதி அனுமதிப்பத்திரம் நிறுத்தம்

சாவகச்சேரி ஜன. 7

போக்குவரத்து விதிமுறைகளை மீறி மதுபோதையில் வாகனம் செலுத்திய 7 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று மொத்தமாக 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய இருவருக்கும், மதுபோதையில் வாகனம் செலுத்திய ஐவருக்கும் எதிராக நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டன. மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதமும், மதுபோதையில் வாகனம் செலுத்திய ஐவருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதமும் தண்டம் விதித்த நீதிவான், ஐவரின் சாரதி அனுமதிப் பத்திரங்களை நீதிமன்றில் தடுத்து வைக்குமாறும் உத்தரவிட்டார். (ப)

# நினைவேந்தல் நிகழ்வும் குருதிக்கொடையும்

மன்னார்,ஜன.7

படுகொலை செய்யப்பட்ட அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளாரின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும், குருதிக்கொடையும் மன்னாரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

வங்காலை புனித அன்னாள் ஆலயத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, ஆலய வளாகத்தில் அமைந்துள்ள அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளாரின் சிலைக்கு முன் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

தொடர்ந்து அருட்பணி மேரி பஸ்ரியன் சமூக முன்னேற்றக் கழகத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை நிகழ்வும் இடம்பெற்றது. (ஐ-56)



# பெரிய அடைப்பு நாச்சிமார் குளத்தின் நீர் வெளியேறாது

## கமநல சேவைகள் நிலையம் உறுதி

யாழ்ப்பாணம், ஜன.7

காரைநகர் பெரிய அடைப்பு நாச்சிமார் குளத்தின் நீர் வெளியேறாது இருப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று கமநல சேவைகள் நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

காரைநகர் பெரிய அடைப்பு நாச்சிமார் குளம் சுமார் 200க்கும் மேற்பட்ட விவசாயிகளின் விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான நீரை வழங்குவதோடு நிலத்தடி நீரையும் பாதுகாக்கின்றது. கடந்த வார இறுதியில் கனமழை பெய்யாத போதும், குளத்தின் நீர் அதிகளவு கடலுக்குச் சென்றது என்று குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இது தொடர்பில் அந்தப் பகுதிக்குப் பொறுப்பாக உள்ள கமநல சேவைகள் நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் மேலும் தெரிவித்ததாவது;

குளத்தின் நீர் அதிகளவு வெளியேறியமை வருத்தம் அளிக்கிறது. குளத்தின் கதவு பொருத்தும் பகுதியில் ஏற்பட்ட சிறு கசிவே நீர் வெளியேறுவதற்கு காரணமாக அமைந்திருக்கலாம். தற்போது குளத்தின் கதவுப் பகுதியில் நீர்க் கசிவு ஏற்படாத வகையில் மண் மூடைகள் அடுக்கப்பட்டுள்ளன. குளம் தொடர்பிலும், விவசாயிகள் தொடர்பிலும் அவதானத்துடன் செயற்பட்டு வருகிறோம் என்றார். (ப-20)

# படைப்புழுத் தாக்கத்தால் 14 ஏக்கரில் சோளப்பயிர் பாதிப்பு

## விவசாயிகள் கவலை!!

**வவுனியா, ஜன.7**

**வவுனியா பூவரசங்குளம் பகுதியில் சுமார் 14 ஏக்கரில் செய்கை பண்ணபட்ட சோளப் பயிர்செய்கை படைப்புழுத் தாக்கத்தால் முழுவதும் அழிவடைந்துள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**



இது தொடர்பில் விவசாயிகள் கருத்துத் தெரிவிக்கையில்;

நாம் வருடந்தோரும் மேட்டுப் பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வருகின்றோம். அதேபோன்று இம்முறை பூவரங்குளம் பகுதியில் சோளப் பயிர்ச்செய்கையை அதிகளவில் பயிரிட்டுள்ளோம். மொத்தமாக 14 ஏக்கருக்கும் அதிகமான பிரதேசத்தில் சோளம் பயிரிடப்பட்டுள்ளது.

கூலி, சோழம் விதை, மருந்து என பல லட்சம் ரூபா பணம் இது வரை செலவாகியுள்ளது. தற்போது படைப்புழுத் தாக்கத்தால் நாம் மிகப்பெரும் இழப்பை சந்திக்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு செய்கை பண்ணப்பட்ட சோளத்தை அறுவடை செய்திருந்தால் பல லட்சம் ரூபா இலாபத்தை ஈட்டியிருப்போம். ஆனால் தற்போது ஏற்பட்டுள்ள படைப்புழுத் தாக்கத்தால் சோளப் பயிர் முழுவதும் அழிவடைந்துள்ளது. எனவே இதனால் ஏற்பட்டுள்ள இழப்பு தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் - என்றனர். (ஐ-110)



# ஐயப்ப பக்தர்களுக்கு உணவுப் பொதிகள்

வவுனியா, ஜன. 7

வவுனியாவில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள ஐயப்பன் பக்தர்களுக்கு சபரிவாசன் தீர்த்த யாத்திரைக் குழுவால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் கணேசபுரம், மணிபுரம், மரக்காரம்பளை, கூமாங்குளம், கந்தபுரம், சமயபுரம் ஆகிய பகுதிகளில் கொவிட்19 தொற்றுக் காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட ஐயப்பசாமிகள் மற்றும் ஐயப்பன் பக்தர்கள் உட்பட 50 குடும்பங்களுக்கு சுகாதாரப் பரிசோதகர் சுகந்தனின் மேற்பார்வையில் இந்த உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ப-110)

# கிளிநொச்சியிலும் படைப்புழு தாக்கம் 18 ஏக்கர் சோளச்செய்கை பாதிப்பு!

கிளிநொச்சி,ஜன.7

இலங்கையில் சோளப்பயிர்களுக்கு சவாலாக மாறி வருகின்ற படைப்புழுவின் தாக்கம் கிளிநொச்சி மாவட்டத்திலும் உணரப்பட்டுள்ளது. கனகாம்பிகைக்குளம், ஜெயபுரம், நல்லூர், வன்னேரி, அக்கராயன் குளம் போன்ற பகுதிகளில் 18 ஏக்கர் வரை சோளச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் பொன்னையா அற்புதச்சந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்



"மாவட்டத்தில் 160 ஏக்கர் நிலப்பரப்பில் சோளச் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் தற்போது 18 ஏக்கர் நிலப்பரப்பில் படைப்புழுவின் தாக்கத்தை உணரக்கூடியதாகவுள்ளது. இரண்டு வாரம் தொடக்கம் இரண்டு மாதங்கள் வரையான பயிர்களிலேயே இவற்றின் தாக்கத்தை அவதானிக்க முடிகிறது. விவசாயப் போதனாசிரியர்களின் வழிநடத்தலில் பல பிரதேசங்களில் படைப்புழு விவசாயிகளால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. படைப்புழு தொடர்பாக விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் விழிப்புணர்வு செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றார். (ஐ-113)

# மேட்டு நிலப் பயிர்களும் கட்டாக்காலிகளால் பாதிப்பு

## மாயவனூர் விவசாயிகள் கவலை

கிளிநொச்சி, வட்டக்கச்சி மாயவனூர் பகுதியில் உள்ள மேட்டுநிலப் பயிர்களும், கட்டாக்காலிகளால் பாதிப்படைகின்றன என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்ததாவது;

நாம், காலபோகப் பயிர்ச் செய்கையாக உழுந்து, கௌபி, பயறு, கச்சான் போன்றவற்றைப் பயிரிட்டுள்ளோம். கால்நடைகளின் உரிமையாளர்கள் சிலர் அவற்றைக் கட்டுப்படுத்தாது கட்டாக்காலியாக விடுவதால் அவை பயிர்களைச் சேதப்படுத்துகின்றன. காலபோகப் பயிர்ச்செய்கை தொடங்கும் காலத்தில் கால்நடைகளைக் கட்டிவளர்க்குமாறு கமக்கார அமைப்பால் கிராமத்தில் கால்நடை வளர்க்கும் அனைவருக்கும் அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலும் சிலர் அசமந்தப்போக்குடன் அவற்றை அவிழ்த்து விடுகின்றனர். இதனாலேயே இந்தப் பயிரழிவுகள் ஏற்படுகின்றன. இதுதொடர்பில் கமக்கார அமைப்பினரிடம் தெரியப்படுத்தி அவர்கள் கால்நடைகளைப் பிடித்து பயிரழிவு வாங்க முற்படும் போது, குறித்த கால்நடைகளின் வளர்ப்பாளர்கள் அவர்களுடன் முரண்படுகின்றனர். எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுத்து கட்டாக்காலிகளிடமிருந்து எமது பயிர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ப-ரி1)

# இணையவழி கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜன.7

கொரோனாத் தொற்றுக் காரணமாக வர்த்தகர்கள் மற்றும் சிறுகைத்தொழிலாளர்கள் பொருளாதார ரீதியில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான இணையவழி கருத்தரங்கு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

மத்திய வங்கியின் கிளிநொச்சி பிராந்திய காரியாலயத்தின் ஏற்பாட்டில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணி வரை யாழ். வணிகர் கழக கேட்போர் கூடத்தில் இந்த இணையவழிக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

ஆர்வமுள்ள வர்த்தகர்கள் மற்றும் சிறு கைத்தொழிலாளர்கள் தவறாது இக் கருத்தரங்கில் கலந்து கொண்டு பயன்பெறமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## விற்பனை பிரதிநிதி தேவை

சிவகுரு ஹாட்வெயாருக்கு
சீற் விற்பனை பிரதிநிதி உடன் தேவை.

077 772 2305

## யாழ்ப்பாணத்தில் உடனடி வேலைவாய்ப்பு

**R.I.B. Group (Pvt) Ltd நிறுவனத்தில்**

விற்பனை மேலாளர் - (Sales Executive)
அனுபவம் தேவை
வயது (Age) : Up to 30
Salary Package :- 45000/=

விற்பனை பிரதிநிதி (Sales Representatives)
அனுபவம் உள்ளவர்கள் Experienced
பயிலுனர்கள் Trainees

வாகன சாரதிகள் -Drivers (Heavy Vehicle)

குறிப்பு :- உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்கவும்
நேர்முகத் தேர்வு திகதி :- 09.01.2021
நேரம் :- மு.ப 10.00- மதியம்12.30

இடம்:- 53, காதி அபுபக்கர் வீதி, யாழ்ப்பாணம்.

**தொ.பே.இல:-077 388 3879, 076 138 9356**

**Faculty of Management Studies and Commerce, University of Jaffna, Sri Lanka.**
**Master of Business Administration**

The following examinations are re-scheduled to be commenced from the following dates mentioned below.
Please find further details from our website, http://www.maco.jfn.ac.lk/.

| Examination | Date |
|---|---|
| Second Examination in Master of Business Administration, Second Semester 2018 (Batch III) | 16th January 2021 |
| Placement Examination- MBA Programme (Batch V) | 17th January 2021 |
| First Examination in Master of Business Administration, Second Semester 2018 (Batch IV) | 14th February 2021 |

Registrar
University of Jaffna.

## வெல்டர் தேவை

**மல்லாகத்தில் இயங்கும்**
எமது ஸ்தாபனத்திற்கு பின்வருவோர் தேவை
ஒட்டுவேலை செய்வதற்கு வெல்டரும்
உதவியாளரும் தேவை.

- வெல்டருக்கு
  மாதம் 40000/= இருந்தும் வழங்கப்படும்
- உதவியாளருக்கு
  மாதம் 25000/= இருந்து வழங்கப்படும்

தொடர்புகளுக்கு: 074 049 0003

**கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**முதலாம் வருட இரண்டாம் அரையாண்டு பரீட்சைகள்**
**(பழைய பாடத்திட்டம்) – 2018**

- மேற்படி பரீட்சைகள் விரைவில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.
- மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்தும் பற்றுச்சீட்டு என்பவற்றினை 07/01/2021 திகதி முதல் கலைப்பீட இணையத்தளத்திலிருந்து (http://www.arts.jfn.ac.lk/) தரவிறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.
- மீள் பரீட்சார்த்திகள் மற்றும் மருத்துவ காரணங்களால் முதல் தடவையாக பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் அனைவரும் ஒரு பாட அலகிற்கு மீள் பரீட்சை/பரீட்சை கட்டணமாக ரூபா 250/= வீதம் மக்கள் வங்கிக் கிளையில் செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.
- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு இரண்டையும் இணைத்து பிரதிப் பதிவாளர், கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்கு பதிவுத்த பாலில் 20/01/2021 திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கவும்.
- ஏற்கனவே விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருப்பின் மீளவும் விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை.

விண்ணப்ப முடிவுத்திகதியின் பின் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை மாணவர்கள் கவனத்தில் கொள்ளவும்.

பதிவாளர்

## குமார் பொன்னம்பலத்தின் 21 ஆவது நினைவு தினம்

யாழ்ப்பாணம், ஜன. 7


மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 21 ஆம் ஆண்டு நினைவு தினம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நேற்று முன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கொக்குவிலிலுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை அலுவலகம், யாழ்ப்பாண மாநகர முதல்வர், சட்டத்தரணி மணிவண்ணனுடைய அலுவலகம், மற்றும் வவுனியாவிலும் இந்நிகழ்வுகள் நடைபெற்றன.

வவுனியா ஆதி விநாயகர் ஆலய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில், குமார் பொன்னம்பலத்தின் உருவப் படத்துக்கு சுடரேற்றி, மலரஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து நினைவுப் பேருரைகளும் இடம்பெற்றன.

நிகழ்வில் வவுனியா அரசியல்வாதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ110,26)

# மரண அறிவித்தல்



## யோகானந்தன் கீர்த்தி

சரசாலை மத்தி சாவகச்சேரியை பிறப்பிடமாகக் கொண்ட யோகானந்தன் (முன்னாள் விசேட சேவை அலுவலர் தற்போது பிரான்ஸ்) ஆனந்தலீலா தம்பதியினரின் செல்வப் புதல்வன் கீர்த்தி 01.01.2021 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் கீர்த்திகா (சட்டவல்லுனர்-பிரான்ஸ்), காலஞ்சென்ற கிரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான இராசையா (ஓய்வு நிலை ஆசிரியர்) இராசசிரோன்மணியின் பாசமிகு பேரனும், சிவகௌரி ( ஓய்வு நிலை ஆசிரியர் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை), ஜெயகௌரி, ஞானகௌரி, விசாகன் (ஆய்வு கூட உதவியாளர் சாவகச்சேரி இந்து கல்லூரி), காந்திகுமார் (முன்னாள் ப.நோ.கூ.ச கிளை முகாமையாளர் தற்போது பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மருமகனும், சயந்தவி, பவீஷனன், மாதங்கி (சாவகச்சேரி இந்து கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான தம்பையா (ஓய்வு நிலை லிகிதர்), விஸ்வநாதன் (ஓய்வு நிலை அதிபர்) மற்றும் பரமேஸ்வரியின் பேரனும் காலஞ்சென்றவர்களான சிவானந்தன், நித்தியானந்தன், குணசேகரன், சதானந்தன், மற்றும் தயானந்தன் ( Canada ), ஜெகராஜசேகரன் (Canada ) ஆகியோரின் பாசமிகு பெறாமகனும் கலாவாணி, தர்மலிங்கம் (America), கலாராணி ஆகியோரின் பாசமிகு மருமகனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"அம்பாள் அகம்"
சரசாலை மத்தி,
சாவகச்சேரி

தகவல்
காந்திகுமார் மாதங்கி
(மச்சாள்)

## 3 தமிழ்த்....

முன்மொழிவு வரைவைத் தயாரிப்பது தொடர்பில் மூன்று தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒருமித்த நிலைப்பாட்டை எடுத்துள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகிய மூன்று கட்சிகளுக்கிடையில் கொழும்பில் நேற்று மாலை நடைபெற்ற சந்திப்பிலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'மூன்று கட்சிகளும் ஒற்றுமையாக முன்மொழிவு வரைவைத் தயாரிக்க மூவர் அடங்கிய குழுவும் நேற்றைய கூட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் சார்பில் அதன் முக்கியஸ்தர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரனும் நியமிக்கப்பட்டுள்ளனர். மூவரும் இணைந்து இன்று தொடக்கம் தயாரிக்கும் முன்மொழிவு வரைபை மூன்று தமிழ்த் தேசியக் கட்சிகளும் மீண்டும் கூடி ஆய்வுசெய்து இறுதி செய்யும். அதன்பின்னர் அந்த வரைபை ஐ.நா மனித உரிமைகள் சபையின் ஆணையாளருக்கும், ஐ.நா மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் அனுப்பிவைப்போம்' என்றார். வரைபிலுள்ள பரிந்துரைகளை இலங்கை அரசுக்குத் தெரியும் வகையில் பகிரங்கப்படுத்துவதில்லை எனவும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே புதிய பிரேணைக்கான முன்மொழிவுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பில் தமிழ்த் தேசியத் தளத்தில் உள்ள கட்சிகளை ஒருங்கிணைப்பதற்கான செயற்பாடுகள் கடந்த டிசெம்பர் 29ஆம் திகதி கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் இரண்டாம் கட்டச் சந்திப்பு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த இரு சந்திப்புகளிலும் பூரணமான இணக்கம் ஏற்படாத நிலையில் நேற்று கொழும்பில் மூன்று தமிழ்த் தேசியக் கட்சிகளின் உறுப்பினர்கள் நேரில் சந்தித்து வரைபைத் தயாரிப்பது தொடர்பில் ஒருமித்த நிலைப்பாட்டை எடுத்துள்ளன.

மனித உரிமைகள் செயற்பாட்டாளர் பாக்கியசோதி சரவணமுத்து தலைமையில் கொள்ளுப்பிட்டியிலுள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று மாலை 6 தொடக்கம் இரவு 9.30 மணிவரை நடைபெற்ற கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் அதன் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராசா (தமிழரசுக் கட்சி), செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), தர்மலிங்கம் சித்தார்த்தன் (புளொட்) மற்றும் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் ப.சத்தியலிங்கம் ஆகியோரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட உறுப்பினர்களும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி சார்பில் அதன் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் உள்ளிட்ட உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (ம22)

## தொற்றாளர்...

ணிக்கை 46 ஆயிரத்தைக் கடந்துள்ளது. நேற்று மட்டும் 522 பேர் தொற்றுக்குள்ளாகினர். இதற்கமைய கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரையில் 42 ஆயிரத்து 498 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 46 ஆயிரத்து 248ஆக அதிகரித்துள்ளது. தொற்றாளர்களில் 39ஆயிரத்து23பேர்குணமடைந்துள்ளனர். 7 ஆயிரத்து 6 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-22)

## இலங்கை...

அமைப்புக்கள் நேற்றுமுன்தினம் ஒருமித்துக் கோரிக்கை விடுத்துள்ளன.

'சிரேஷ்ட இராஜதந்திரிகள் மற்றும் புத்திஜீவிகளின் ஆலோசனைப்படி, பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகள், சட்ட நிபுணர்கள், கல்விமான்கள், மதத் தலைவர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் என பலருடன் பல கட்டங்களாக நடைபெற்ற தொடர்ச்சியான கலந்துரையாடல்களின் முடிவில் அனைவரின் ஏகோபித்த சம்மத்துடனும் ஆதரவுடனும் இந்த நகர்வு கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

இதற்கு பல பல்கலைக் கழகங்களின் தமிழ்ச் சமூகங்கள், கல்விசார் அமைப்புக்கள், தமிழ்ப் பாடசாலைகள், ஊடக அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், அறக்கட்டளைகள், மத வழிபாட்டு நிலையங்கள், சட்ட நிறுவனங்கள், அலுவலகங்கள் மற்றும் வியாபார நிலையங்கள் என இதுவரை 250 அமைப்புக்கள் தங்கள் முழுமையான ஆதரவை வழங்கி கையெழுத்திட்டுள்ளன. தமது வேறுபாடுகளை விடுத்து இப்படி பெருந்தொகையில் தமிழ் அமைப்புக்கள் ஒன்றுபடுவது வரலாற்றில் இதுவே முதல்தடவையாகும்.

தற்போது இலங்கை விவகாரத்தில் தீர்மானத்தை கொண்டுவரும் அதிகாரம் பிரிட்டன் கையில் உள்ளது. இந்தநிலையிலேயே, எவ்வாறான தீர்மானத்தை பிரிட்டன் கொண்டுவரவேண்டும் எனவும் அதற்கு பிரிட்டன் தமிழர்கள் என்ன செய்யவேண்டும் எனவும் பல புத்திஜீவிகள், சட்டத்தரணிகள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் வழங்கிய ஆலோசனையின் பிரகாரம், பன்முக கோரிக்கைகளால் ஏற்படக்கூடிய பின்னடைவுகளைத் தவிர்க்கும் முகமாகவும், ஐ.நா. மனித உரிமை சபையின் அதிகார வரம்புக்கு உட்பட்ட, நடைமுறைச் சாத்தியமானதுமான ஒற்றைக் கோரிக்கையாக இந்த ஆவணம் துறைசார் நிபுணர்களால் வரையப்பட்டுள்ளது.

அந்த வகையில் 'மியான்மருக்காக நிறுவப்பட்டதைப் போன்ற ஒரு சர்வதேச சுயாதீன விசாரணைப் பொறிமுறையை உருவாக்க 46ஆவது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் ஒரு தீர்மானம் எடுக்குமாறு நாங்கள் எங்கள் அரசைக் கேட்டுக் கொள்கிறோம். மிகவும் கடுமையான சர்வதேச குற்றங்கள் மற்றும் சர்வதேச சட்ட மீறல்கள் மற்றும் தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலை பற்றி விசாரித்து, ஆதாரங்களைச் சேகரித்து கிரிமினல் வழக்குக்கான கோப்புகளை தயாரிக்கக் கோருகிறோம். அத்தோடு இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டவர்களையும் விசாரணை செய்து, செப்ரெம்பர் 2015இன் ஓ.ஐ.எஸ்.எல். அறிக்கையில் உள்ள தகவல்கள் மற்றும் ஆதாரங்களைப் பயன்படுத்துமாறும் கேட்டுக் கொள்கிறோம்' என்பதே இந்த ஆவணத்தின் சாராம்சமாகும்.

குறுகிய கால அவகாசம் காரணமாக ஏனைய அமைப்புக்களை இணைத்துக் கொள்ள முடியாத போதிலும், அவர்களின் கருத்துக்களும் உள்வாங்கப்பட்டு, அவர்களின் ஆதரவும் கிடைக்கும் பட்சத்தில், இரண்டாவது தொகுதி கையெழுத்துக்கள் அடுத்தவாரம் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இதனால் பிரிட்டன் வாழ் அனைத்து தமிழ் புலம்பெயர் மக்கள் சார்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்தக்கூட்டுக் கோரிக்கைக்கு, பிரிட்டனிலுள்ள அனைத்து அரசியல் மற்றும் மனித உரிமை அமைப்புக்கள், அபிவிருத்தி சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள், அறக்கட்டளைகள், மத வழிபாட்டு நிலையங்கள், தமிழ்ப் பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள, நுண்கலை நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், முதியோர் சங்கங்கள், ஊடகங்கள், தொழில்சார் அலுவலகங்கள் மற்றும் வர்த்தகநிறுவனங்கள், தமிழ்க்கடைகள் என அனைவருடைய ஆதரவும் தேவை என்றும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ம-த)

## 42 ஆயிரம்...

முழுமையாகவோ பகுதியாகவோ அனுமதிக்கப்படாத கிராம அலுவலர் பிரிவுகளும் முதல் தடவையாக மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டதனால் , அந்தப் பிரிவைச் சேர்ந்த 21 ஆயிரத்து 905 பேரின் பெயர்களும் நீக்கப்பட்டுள்ளன.

'2020ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்பட்டு வருகின்றது. பெப்ரவரி முதலாம் திகதி பட்டியல் இறுதி செய்யப்படும். தற்போது வாக்காளர் பெயர்ப் பட்டியலிலிருந்து நீக்கப்படுப வர்கள் மற்றும் சேர்க்கப்படுபவர்களின் விவரங்களைக் காட்சிப்படுத்தியுள்ளோம். அது தொடர்பான ஆட்சேபனைகளை உரிமைக் கோரிக்கை படிவங்கள் ஊடாக கையளிக்க முடியும்' என்று யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் கி.அமல்ராஜ் தெரிவித்தார். 2019ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 4 லட்சத்து 79ஆயிரத்து 584 பேர் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டிருந்தனர். அதிலிருந்து 42ஆயிரத்து 234 பேர் நீக்கப்படவுள்ளனர். 33 ஆயிரத்து 211பேர் சேர்க்கப்படவுள்ளனர். இவர்களின் பட்டியலே தற்போது காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

### மீளாய்வு

போர்ச் சூழல் காரணமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள மாவட்டங்களில் வாக்காளர் பெயர் பட்டியல் ஒவ்வொரு ஆண்டும் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. போர் முடிந்த பின்னர் முதல் தடவையாக 2010ஆம் ஆண்டு மீளாய்வு செய்யப்பட்டது. யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் மாத்திரம் 4 லட்சம் பேரின் பெயர்கள் நீக்கப்பட்டன. இதன் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் மீளாய்வு செய்யப்பட்டது. வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவில் மக்கள் மீளக் குடியமர்வுக்கு அனுமதிக்கப்படாத கிராம அலுவலர் பிரிவுகள் மீளாய்வு செய்யப்படுவதில்லை.

2019ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும்போது, வலி. வடக்கில் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படாத 21 கிராம அலுவலர் பிரிவுகளையும் மீளாய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது.

மக்கள் மீளக்குடியமராத கிராம அலுவர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களை நாட்டின் எந்தப் பாகத்திலிருந்தாலும், வெளிநாடுகளிலிருந்தாலும் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவித்தல் விடுத்து இதற்காக சிறப்பு விண்ணப்பப் படிவமும் தேர்தல்கள் திணைக்களத்தால் வெளியிடப்பட்டிருந்தது. அரசியல் தரப்புக்களின் கடும் அழுத்தங்களையடுத்து இறுதி நேரத்தில் மீளாய்வுக்கு உட்படுத்தும் நடவடிக்கை கைவிடப்பட்டது. அத்துடன் இதுவே இறுதிச் சந்தர்ப்பம் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்திருந்தது.

### வலி.வடக்கில் மட்டும் 21 ஆயிரம் பேர் நீக்கம்

இந்த நிலையில் 2020ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிப்பின்போது மக்கள் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படாத 21 கிராம அலுவலர் பிரிவுகளும் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள், இதுவரை நடந்த ஏதாவது ஒரு தேர்தலில் வாக்களித்திருந்தாலும் அவர்களின் பெயர்களை நீக்காமல், எந்தவொரு இடத்திலும் பதிவு செய்யாத, வாக்களிக்காதவர்களின் பெயர்கள் என்று அடையாளப்படுத்தப்பட்ட 21 ஆயிரத்து 905 பேர் நீக்கப்பட்டுள்ளனர்.

### தாக்கம்

கடந்த 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் யாழ்ப்பாண மாவட்டத்தின் வாக்காளர் பெயர் பட்டியலில் ஒவ்வொரு ஆண்டும் ஆகக் குறைந்தது 7 ஆயிரம் பேராலாவது அதிகரிப்பு ஏற்பட்டு வந்தது. இம்முறை முதல் முறையாக 9 ஆயிரம் வாக்காளர்களால் அது குறைவடையவுள்ளது. இதனால் யாழ்ப்பாண மாவட்டத்துக்கான தேர்தல் ஆசனம், பல்கலைக்கழக அனுமதி உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் இதன் தாக்கம் எதிரொலிக்கவுள்ளது. (ம-ஒ.5)

## வெளிநாடுகளில்...

குழு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்குள் உள்ளடங்கும், நகுலேஸ்வரம் (ஜே/226), காங்கேசன்துறை மேற்கு (ஜே/233), காங்கேசன்துறை மத்தி (ஜே/234), காங்கேசன்துறை தெற்கு (ஜே/235), கட்டுவன் (ஜே%238), தென்மயிலை (ஜே/240), வறுத்தலைவிளான் (ஜே/241), குரும்பசிட்டி (ஜே/242), குரும்பசிட்டி கிழக்கு (ஜே/243), வயாவிளான் கிழக்கு (ஜே/244), வயாவிளான் மேற்கு (ஜே/245), மயிலட்டி வடக்கு (ஜே/246), மயிலிட்டித்துறை தெற்கு (ஜே/248), தையிட்டி வடக்கு (ஜே/249), தையிட்டி மேற்கு (ஜே/250), மயிலிட்டித்துறை வடக்கு (ஜே/251), பலாலி தெற்கு (ஜே/252), பலாலி கிழக்கு (ஜே/253), பலாலி வடக்கு (ஜே/254), பலாலி வடமேல் (ஜே/255), பலாலி மேற்கு (ஜே/256) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளும்,

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் ஆனையிறவில் (கே.என்./46), பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் இத்தாவில் (கே.என்./92), முகமாலை (கே.என்./93), வேம்பொடுகேணி (கே.என்./94) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளும்,

மன்னார் மாவட்டத்தில் முசலி பிரதேச செயலர் பிரிவில் முள்ளிக்குளம் (எம்.என்./153) கிராம அலுவலர் பிரிவையும் சேர்ந்தவர்கள் எங்கிருந்தாலும் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.


இந்தக் கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் வடக்கு மாகாணத்தின் எந்தப் பிரிவில் வசித்தாலும் இதுவரை தம்மை பதிவு செய்யாவிடின், தாம் வசிக்கும் பிரிவுகளைச் சேர்ந்த கிராம அலுவலரிடம் சென்று விண்ணபடிவத்தைப் பெற்று பதிவுசெய்ய முடியும்.

இந்தக் கிராம அலுவலர் பிரிவுகளில் வசித்து தொழில், கல்வி அல்லது வேறு காரணங்களுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளவர்களின் தகவல்களையும் இந்த விண்ணபத்தில் உட்சேர்ந்து அவர்களின் நெருங்கிய உறவினரால் அல்லது அட்டர்னி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளவரால் கையொப்பம் இட்டு பெப்ரவரி முதலாம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்கலாம்.

முழுக் குடும்பமாக வெளிநாடு சென்றிருந்தால் அந்த நபர்களின் விண்ணப்பங்கள் குறித்த நாட்டின் இலங்கைத் தூதுவர் அலுவலகத்தின் ஊடாக கையளிக்க முடியும்.

வெளிநாடுகளில் இருப்பவர்கள் https://www.elections.gov.lk/ என்ற முகவரி ஊடாகச் சென்று விண்ணப்பப் படிவத்தை தரவிறக்கம் செய்ய முடியும். (மஒ.5)

# மரண அறிவித்தல்



## முருகேசு இராசையா

யாழ் கோப்பாயை பிறப்பிடமாகவும், மட்டுவிலை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட முருகேசு இராசையா அவர்கள் நேற்று (06.01.2021) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற முருகேசு கைராசி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற அருந்ததிப்பிள்ளை அவர்களின் அன்புக் கணவரும், லதா (ஜேர்மனி), சுதாகர் (லண்டன்), ஸ்ரீதர் (மட்டுவில்), வனஜா (ஜேர்மனி), பிரபாகர் (நோர்வே), சகீலா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான மூத்தாம்பி, கண்மணி, அன்னம்மா மற்றும் ஆச்சிமுத்து ஆகியோரின் சகோதரனும், தனபாலசிங்கம் (ஜேர்மனி), திருலோகநாயகி (லண்டன்), ஜெயந்தா (மட்டுவில்), உருத்திரகுமார் (ஜேர்மனி), நிமலராஜி (நோர்வே), புவனேந்திரன் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமனாரும், தனுஷா, ஷாளினி, ஷாமிலி, கஜேந்திரநாத், ராம்நாத், உதயநாத், அசோக்நாத், கஜதீபா, நிதுன், துவாரகன், தாரணி, அஜய், ஆகாஸ், பாரதி, இளங்கோ, மக்சிம், மத்திஸ்த், ஜனிக் ஆகியோரின் அன்புத் தாத்தாவும், டாஷா, ஈஷா, ஆருஷா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2021) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மட்டுவில்,**
**சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 613 6767**

## விற்பனைக்கு

ஊர்க் கோழிக் குஞ்சுகள் (கழுத்துவெட்டியும்) 3 கிழமை வயதுடையவை விற்பனைக்குண்டு
இடம்:யாழ்ப்பாணம். T.P: 077 477 5603

## Pharmacist தேவை


மருந்தகம் ஒன்றிற்கு மருந்தாளர் (Pharmacist) தேவை.
தொடர்புகளுக்கு:
070 185 6968

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவக் குடும்பத்தைச் சேர்ந்த 1976 இல் பிறந்த உத்தரம் 3 ஆம் பாதம். 4 இல் சூரி.செ. 37 பாவக்கிரகம் உள்ள ஆசிரிய மணமகனுக்கு பொருத்தமான வரன் தேவை.
077 538 6405

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
13 . 09 . 1935



மறைவு
08 . 12 . 2020

## அமரர் S.S.இம்மானுவல் (BOSS)


கடந்த 08.12.2020 அன்று காலமாகிய எமது குடும்பத் தலைவர் அமரர் சந்தியா செபஸ்ரி இம்மானுவல் (Boss) அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு அஞ்சலி செலுத்தியோருக்கும் எம் துயரம் பகிர கலந்துகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட அனைவருக்கும் குடும்பத்தினர் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நீங்கா நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்.**
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள் மற்றும்**
**பேரப்பிள்ளைகள்.**

**03,சோமசுந்தரம் அவனியூ,**
**சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.**

# மரண அறிவித்தல்



## கந்தையா சிவசுப்பிரமணியம்

**( முன்னாள் ஓய்வு பெற்ற கூட்டுறவுச்சங்க ஆணையாளர் )**

யாழ்ப்பாணம் வீமன்காமம் வடக்கு தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் தற்போது 4H. தோணிக்கல் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவசுப்பிரமணியம் ( முன்னாள் ஓய்வு பெற்ற கூட்டுறவுச்சங்க ஆணையாளர் ) அவர்கள் 05.01.2021 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதம் அடைந்தார் .

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னத்தங்கம் தம்பதிகளின் ஏக புத்திரனும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசரத்தினம் அவர்களின் மைத்துனரும், சிவகுமார் (பிரான்ஸ்), இரட்ணகுமார் ( இளைஞர் சேவை மன்றம் வடமாகாண ஓய்வு பெற்ற உதவிக்கணக்காளர் ), விஜயகுமாரி (பிரான்ஸ்), அருட்குமார் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு தந்தையும், மைதிலி ( பிரான்ஸ் ) மின்னொலி வதனா ( ஓய்வு பெற்ற ஆசிரியர் இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்), சுபேதரன் (பிரான்ஸ்), செல்வகுமாரி (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜராசந்தான் (அமெரிக்கா) ஜெனனி (அமெரிக்கா), சுரோஜன் (பிரான்ஸ்), சுரேக்கன் (பிரான்ஸ்), சுரோமிஜா ( பிரான்ஸ்) அர்ஷன் (பிரான்ஸ்) அஸ்வின் (பிரான்ஸ்) அஸ்ரியா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கரியைகள் 4H. ஆலடி வீதி தோணிக்கல் வவுனியாவில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (07.01.2021) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இடம் பெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் தோணிக்கல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இரத்தினகுமார் ( மகன்)**
**0776916261**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

பிறப்பு
28 . 05 . 1932



இறப்பு
03 . 01 . 2021

## தர்மதாசன் சின்னத்துரை (Ticket Checker)

யாழ். உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், கல்லுவம், கனடா Toronto ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மராசன் சின்னத்துரை அவர்கள் 03.01.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று கனடாவில் இறைவனடி எய்தினார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், அம்பிகை (லண்டன்), சுகுணகுமார் (Toronto), சுகிர்தன் (Toronto) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான தங்கராசா, தியாகராசா, நடராசா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், மனோகரன், பாலதேவி, உமா ஆகியோரின் பாசமிகு மாமாவும், ஐந்தூரி, மிதுசன், சஜன், சோனா, மனு, உமன், ஆஷா, இயல்பன் ஆகியோரின் அன்புப் பேரனும், கிருஸ்சாந்தராஜா, கெங்காதேவி, மூர்த்தி, கிருபாமூர்த்தி, சாந்தமூர்த்தி, லலிதாம்பிகை, அம்பிகைபாகன், பத்மாம்பிகை, நந்தினி, நந்ததாஸ், மற்றும் காலஞ்சென்றவர்களான, சோமஸ்காந்தராஜா, அருள்காந்தராஜா, நகுலதாஸ் ஆகியோரின் பாசமிகு இளைய ஐயா ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கிரியை :-** Chapel Ridge Funeral Home & Cremation Centre.
**தகனம் :-** Highland Hills Funeral Home and Cemetery.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## அர்த்தமுள்ள...

இலங்கைக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் , இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவை நேற்று முற்பகல் சந்தித்துப் பேச்சு நடத்தினார். அதன்பின்னர் இருவரும் இணைந்து அமைச்சில் கூட்டு ஊடகவியலாளர் மாநாட்டையும் நடத்தினர். இதன்போதே ஜெய்சங்கர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது கருத்து வெளியிட்ட இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன,

'இலங்கையில் சிங்கள, தமிழ், முஸ்லிம் உள்ளிட்ட அனைத்து சமூகத்தினரதும் நலன்களையும் தேவைகளையும் உறுதிப்படுத்துவதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உறுதி பூண்டிருக்கின்றார். பொருளாதாரம், வர்த்தகம், பாதுகாப்பு, மீன்பிடி, கலாசாரம் மற்றும் குறிப்பாக தற்போதைய கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடி ஆகிய பல்வேறு விடயங்கள் தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சருடனான பேச்சின்போது ஆராயப்பட்டது. இந்த நெருக்கடியின்போது பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசால் வழங்கப்பட்ட உதவிகளுக்கு எமது நன்றியை வெளிப்படுத்தினோம். இந்தியாவின் 'அயலகத்துக்கு முதலிடம்' கொள்கை மிகவும் நெருக்கடி வாய்ந்த அண்மைக்காலத்தில் நேர்மறையான விதத்தில் பயன்படுத்தப்பட்டது' என்றார்.

அவரைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர்,

'இந்தியாவின் மிக நெருங்கிய பங்காளரான இலங்கைக்கான பயணத்துடன் 2021ஆம் ஆண்டை ஆரம்பிப்பது குறித்து மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். கொரோனா வைரஸ் பரவலால் இரு நாடுகளும் ஒரேவிதமான சவால்களுக்கு முகங்கொடுத்துள்ள நிலையிலேயே நான் இங்கு வருகை தந்திருக்கிறேன். எனினும், பரஸ்பரம் ஒத்துழைப்புடன் ஒருமித்து செயலாற்றக்கூடிய வாய்ப்பையும் அது ஏற்படுத்தியிருக்கிறது.

தற்போது கொரோனா பரவலின் பின்னரான ஒத்துழைப்பு நடவடிக்கைகள் தொடர்பிலும் இந்தியாவிடமிருந்து இலங்கை தடுப்பு மருந்தைப் பெற்றுக்கொள்வது குறித்தும் ஆராய்ந்தோம். பரஸ்பர நம்பிக்கை, கௌரவம் ஆகியவற்றின் அடிப்படையில் இலங்கையுடனான நல்லுறவை மென்மேலும் வலுப்படுத்திக்கொள்வதில் இந்தியா எப்போதும் அக்கறை கொண்டிருக்கின்றது.

அண்மைக் காலத்தில் இந்தியாவின் பொருளாதாரம் மீண்டு வருவதுடன் இது இலங்கையின் மீது நேர்மறையான நன்மைகளையே ஏற்படுத்தும். பெரும்பாலான இந்திய வணிகங்கள் இலங்கையில் முதலீடு செய்வதில் ஆர்வம் காண்பித்து வருகின்றன. மேலும், இலங்கையின் நீண்டகால நல்லிணக்க செயற்பாடுகளையும் இனங்களுக்கு இடையிலான அமைதியை நிலைநாட்டுவதற்கான அனைத்து மக்களையும் உள்ளடக்கிய அரசியல் கொள்கையையும் இந்தியா ஊக்குவிப்பதுடன் அவற்றை அடைந்துகொள்வதற்கான ஒத்துழைப்புக்களை வழங்கும். அதுமாத்திரமன்றி ஒருமித்த நாட்டுக்குள் தமிழ் மக்களின் அபிலாஷைகளான நீதி, சமாதானம், சமத்துவம், கௌரவம் ஆகியவை உறுதி செய்யப்பட்ட வேண்டும். அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் உள்ளடங்கலாக அர்த்தமுள்ள அதிகாரப்பரவலாக்கத்தை வழங்குவதற்கான அரசின் கடப்பாடுகளும் இதற்குள் உள்ளடங்குகின்றன.

கடல் பாதுகாப்பு குறித்து இந்தியாவும் இலங்கையும் பல்வேறு விடயங்களில் இணங்கியுள்ளன. மீன்பிடித்துறை சார் விடயங்களில் கலந்துரையாடல்கள் தொடரும். இந்திய மீனவர்கள் பலர் இலங்கைச் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். எங்கள் மீனவர்கள் விரைவில் நாடு திரும்புவதை எதிர்பார்த்திருக்கின்றோம் என்றார். (ம-22)

## கோத்தாபய...

இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் அழைப்பின் பேரில் இந்திய வெளிவிவகார அமைச்சர் நேற்றுமுன்தினம் இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டிருந்தார்.

இந்த நிலையில், நேற்றுமுற்பகல் ஜெய்சங்கர், ஜனாதிபதி கோத்தாபயவைச் சந்தித்துள்ளார். இந்தச் சந்திப்பில் ஜெனிவா விடயம், தமிழர் விவகாரம், மாகாண சபை முறைமை மற்றும் அரசியல் தீர்வு ஆகியன முக்கிய இடம்பிடித்தன என அறியமுடிந்தது. ஆனால், சந்திப்பு தொடர்பில் ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இந்த நான்கு விடயங்கள் குறித்தும் எந்தக் கருத்துக்களும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

கொரோனா வைரஸ் நோய்க்கு சிகிச்சையளிக்க இந்தியா தயாரிக்கும் தடுப்பூசியை ஏனைய நாடுகளுக்கு வழங்கும்போது இலங்கைக்கு முன்னுரிமை அளிக்கத் தயாராக உள்ளோம் என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் தெரிவித்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

'கொரோனாத் தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதற்கான எதிர்கால நடவடிக்கை குறித்து கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, கிச்சையின் அவசியத்தை சரியாக மதிப்பிட்ட பின்னர், இந்தியாவில் தயாரிக்கப்படும் கொரோனாத் தடுப்பூசியைப்பெற இலங்கை விருப்பத்துடன் உள்ளது எனக் கூறினார்.

தடுப்பூசியை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் போது இலங்கைக்கு முன்னுரிமை அளிப்போம் என ஜெய்சங்கர் உறுதியளித்தார். பரஸ்பர நன்மைகளை அதிகரிக்க இந்திய இலங்கை இருதரப்பு உறவை பரஸ்பர நன்மையைப் பெறும் வகையில் மேம்படுத்த ஜனாதிபதியும் இந்திய வெளிவிவகார அமைச்சரும் இண்க்கம் தெரிவித்தனர்.

இந்தியப் பங்களிப்புடன் இலங்கையில் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திட்டங்களுக்கு மேலதிகமாக, ஒத்துழைப்பு வளர்ச்சியை விரிவுபடுத்தக்கூடிய பல துறைகள் கலந்துரையாடலின்போது அடையாளம் காணப்பட்டன. கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம், எல்.என்.ஜி (திரவ, இயற்கை எரிவாயு) மின் திட்டம், வீடுகள் மற்றும் வீதிகள் அமைத்தல், விவசாய அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி, தகவல் தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் மாற்று மின்சக்தி மூலங்களின் அபிவிருத்தி ஆகியவை இதில் அடங்கும்.

முறையான கல்வியைப் பெற்ற இளைஞர்கள் இலங்கையில் உள்ளனர் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அந்த இளைஞர்களுக்கு பல்வேறு துறைகளில் முறையான தொழில் பயிற்சி அளிக்க இந்தியாவின் உதவியை எதிர்பார்க்கிறோம் என தெரிவித்தார்.

இலங்கையின் குறிப்பிட்ட தேவைகள் தெரிவிக்கப்படும்போது தொழில் பயிற்சி திட்டங்களுக்கு உதவத் தயாராக உள்ளோம் என ஜெய்சங்கர் கூறினார். சூரிய வெப்பத்தை மாற்று மின்சக்தி மூலமாக பயன்படுத்த இந்திய உதவி ஏற்கனவே பெறப்பட்டுள்ளது. இந்தத் துறைக்கு எதிர்காலத்தில் இந்தியா மேலும் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்க முடியும் என்று அமைச்சர் கூறினார்.

கொரோனாத் தொற்றுநோயால் வீழ்ச்சியடைந்துள்ள சுற்றுலாத்துறையை புதுப்பிக்க வேண்டிய அவசியம் குறித்து இரு தரப்பினரும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

'மாலைதீவு தொடர்ந்து பபல் முறைமையில் சுற்றுலாப் பயணிகளை அழைத்து வருகின்றது. ஏற்கனவே ஏராளமான இந்தியர்கள் அங்கு சென்றுள்ளனர். தொற்று நோயால் ஏற்படும் மன அழுத்தத்திலிருந்து விடுபட மக்கள் சுற்றுலாப் பயணம் செய்ய விரும்புகிறார்கள்.

புதுடில்லியில் உள்ள ஹொட்டல்களில் இப்போது இந்தியர்கள் நிறைந்திருக்கின்றார்கள். இலங்கைக்குச் செல்ல நாங்கள் அவர்களை ஊக்குவிக்க முடியும்' என்றும் அமைச்சர் ஜெய்சங்கர் குறிப்பிட்டார். சுற்றுலாத் துறையைப் புதுப்பிக்க புதிய நடவடிக்கைகள் குறித்து முடிவு செய்ய இந்தியா, இலங்கை, மாலைத்தீவு மற்றும் நேபாளம் ஆகியவை இணைந்து விரைவில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தவும் முடிவு செய்யப்பட்டது' என்றுள்ளது. (ம-22)

## ஆஸிக்கு...

மேன்முறையீடு செய்யப்படும் என்று அமெரிக்க வழக்கறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதனால் இந்த வழக்கு பிரிட்டன் உச்சநீதிமன்றத்தை நாடவுள்ளது. இந்த வழக்கு நடைமுறைகளுக்கு மூன்று ஆண்டுகள் எடுத்துக்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம-வ)

## வவுனியா...

பல பகுதிகள் முடக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று மாலை அவற்றில் சில பகுதிகள் இயல்பு நிலைக்குத் திரும்பின என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா பட்டாணிச்சூர் பகுதியைச் சேர்ந்த 7 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை இதுவரை உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து பட்டாணிச்சூர் பகுதியில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் கடமைக்கு நிறுத் தப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டன. பட்டாணிச்சூர் பகுதியில் வசிக்கும் பலர் வவுனியா பசார் வீதி மற்றும் நகரில் உள்ள அனேகமான வியாபார நிலையங்களை நடத்திவருவதுடன் ஊழியர்களாகவும் பணியாற்றிவருகின்றனர்.

அதனைக் கருத்தில்கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக எழுமாறான பரிசோதனையை முன்னெடுப்பதற்காக நேற்றுக் காலை வவுனியா பசார் வீதி, தர்மலிங்கம் வீதி, சந்தை வீதிகள் இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரால் முற்றாக முடக்கப்பட்டு அங்கு பலருக்குப் பி.சி.ஆர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதையடுத்து நேற்று மாலை முடக்க நிலையில் தளர்வு கொண்டுவரப்பட்டது.

தொற்றுக்குள்ளான பட்டாணிச்சூர் பகுதியைச் சேர்ந்தவர்களால் நடத்தப்படும் மூன்று வியாபார நிலையங்கள் சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனைகளுக்கு அமைய மூடப்பட்டன. (ம-110)

## எருக்கலம்பிட்டி...

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்றுக் காலை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொற்றுக்குள்ளானவர்கள் கடந்த 26ஆம் திகதி புத்தளத்திலிருந்து மன்னார் எருக்கலம்பிட்டிக்கு வருகை தந்துள்ளனர். குடும்பத் தலைவர் புத்தளத்திலிருந்து கொழும்புக்குச் சென்று கடந்த 29ஆம் திகதி மீண்டும் புத்தளத்துக்குத் திரும்பியுள்ளார்.

கொழும்பு கொச்சிக்கடையில் நின்றபோது அவருக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இவருடைய குடும்ப உறுப்பினர்கள் 6 பேரும் மன்னார் எருக்கலம்பிட்டியில் உள்ள அவர்களது வீடுகளில் சுய தனிமைப்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது குடும்பத் தலைவரின் னமகள், மூன்று மகன்கள், மகளுடைய கணவர் ஆகிய 5 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. குடும்பத்தலைவரின் மனைவிக்கு தொற்று இல்லை.

இவர்கள் 26ஆம் திகதி மன்னார் எருக்கலம்பிட்டிக்கு வந்து 27ஆம் திகதி திருமண நிகழ்வில் கலந்து கொண்டுள்ளனர். அந்த நிகழ்வுக்குச் சென்றவர்கள் மற்றும் இவர்களுடன் தொடர்புபட்டவர்கள் ஆகியோரின் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. அதற்கு அமைவாக தனிமைப்படுத்தப்பட்டும் வருகின்றனர். இந்த நடவடிக்கை முடிவடையும் வரை மன்னார் எருக்கலம்பிட்டி கிராமம் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளது என்றார்.

இதேவேளை, தொற்றாளர்களுடன் தொடர்பைப் பேணினர் என்ற அடிப்படையில் 46 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. அனைவருக்கும் பி.சி.ஆர் சோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அடுத்தடுத்த தினங்களிலேயே எருக்கலம்பிட்டி தொடர்பில் இறுதி முடிவெடுப்போம் என்று மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார். (ம-ஒ.56)

## கொரோனா....

இருவர் பலியாகியுள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்தார். இதன்படி நாட்டில் கொரோனாத் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 219ஆக அதிகரித்துள்ளது. தெஹிவளைப் பகுதியைச் சேர்ந்த 60 வயதுடைய ஆண், குருநாகல் பகுதியைச் சேர்ந்த 78 வயதுடைய பெண் ஆகியோரே இறந்தவர்கள்.

கொரோனாத் தொற்றால் இதுவரை 219 பேர் உயிரிழந்துள்ள நிலையில், அவர்களில் 206 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் சாவடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-22)

# பிரதேச சபை உறுப்பினர் வன்புணர்ந்தாரென விளக்கமறியலில்

கொழும்பு, ஜன. 7

பெண்ணொருவரை வன்புணர்ந்தார் என்ற குற்றச்சாட்டில் யக்கலமுல்ல பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நக்கியதெனிய, படகெத்திய பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இச்சம்பவம் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவரே இந்த நிலைக்கு உள்ளானார். அவர்கள் இருவரும் உறவினர்கள். 43 வயதான சந்தேகநபரை எதிர்வரும் 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க காலி நீதிமன்று உத்தரவிட்டது. அவர் மீது தண்டனைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று பொலிஸார் கூறியுள்ளனர். (குி)

## தேவை

மில் கிரைண்டிங் உபகரணங்கள் தேவை.

தொ.பே: 077 1449918

## Attorney At Law Final Year Accounting Classess

English | தமிழ் Medium Online மூலமும் குழுவாகவும் கற்பிக்கப்படும்.

T.P: 077 995 4182

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் மானிப்பாய் மேற்கு கட்டுடை சந்தியில் இருந்து நவாலி வீதியில் 12 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. பிரித்து கொடுக்கப்படும். 2 பரப்பாக. தரகர் தேவையில்லை.

(பரப்பின் விலை 5 லட்சம்)

074 075 4204.

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் பலாலி வீதி, கோண்டாவில் சந்தியில் இருந்து இருபாலை வீதியில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. பிரித்து கொடுக்கப்படும். 1 1/2 பரப்பாக. தரகர் தேவையில்லை.

077 2880 152

077 505 8561

(பழனியாண்டவர் கோயில் முன்பாக)


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் ராசவீதியில் ராச வீதி சந்திக்கு அருகாமையில் கோண்டாவில் வீதியில், 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை.

077 468 3354

077 805 1655

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மனம் மகிழ 12 . 09 . 1950

மனம் நெகிழ 07 . 01 . 2014

### கந்தன் தம்பித்துரை

அன்போடு எமைக்காத்து
பண்போடு எமை வளர்த்து
பிரியாது நாம் வாழ வழிகாட்டித் தந்தீர்கள்
அன்பு அப்பாவே...
நீங்கள் மறைந்து போனாலும்
மறந்து போகாத நினைவுகளே நிழலாடும்
எம் நெஞ்சத்துள் என்றென்றும்

இல.533/11 ஆம் யூனிற்,
தருமபுரம்.

குடும்பத்தினர்

## Technoworld Clock tower Road, Jaffna.

A/L 2020 பொறியியல் தொழில்நுட்ப பிரிவு மாணவர்களுக்கு

மீதமுள்ள 10 நாள்களில் அனைத்து செயன்முறைகளும் ஆரம் கற்பிக்கப்படும்

ஆரம்பம்: 08.01.2021

வெள்ளிக்கிழமை: 9.30am, 4.30pm, 7.30 pm

அனைத்து செயன்முறை வகுப்புகளும் Video பதிவுகளாக, தரப்படும்.

A/L 2020 பிரிவை சேர்ந்த எவரும் பற்குபற்றலாம்.

தொடர்புகளுக்கு: 077 017 5346

## மரண அறிவித்தல்

தோற்றம்: 22 . 03 . 1935



மறைவு: 01 . 01 . 2021

### திருமதி பகவதிப்பிள்ளை தர்மலிங்கம்

(ஓய்வு பெற்ற ஆயுள்வேத வைத்தியர்)

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் தற்போது இலண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பகவதிப்பிள்ளை தர்மலிங்கம் அவர்கள் கடந்த (01.01.2021) வெள்ளிக்கிழமை இலண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - பறுபதம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான காசிநாதன் - வள்ளியம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற காசிநாதன் தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி, செல்லையா கதிரவேலு, பரிமளம், காமாட்சி, சிவக்கொழுந்து, சாந்தநாயகி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், துகிதா (இலண்டன்), அங்கசன் (ஆசிரியர் - யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மகேஸ்வரன் (பொறியியலாளர்-இலண்டன்), பிரியதர்ஷினி (ஆசிரியர், யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான செல்லாச்சி, அன்னலக்ஷ்மி சோமசுந்தரம், சுப்பிரமணியம், செல்வராசா, காசி நாதன், சிவலிங்கம் மற்றும் தெய்வானைப்பிள்ளை முத்துத்தம்பி (இலங்கை) க.சிவஞானம் (கனடா), பவானி சற்குணராசா (இலங்கை), மற்றும் சகுந்தலா தேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் அக்ஷயா, அனிஸ் யஷ்வின் ஆகி யோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2021) வியாழக்கிழமை இலண்டனில் உள்ள இல்லத்தில் இலண்டன் நேரப்படி மு.ப 10.00 மணிக்கு (இலங்கை நேரப்படி பி.ப 3.30 மணிக்கு) இடம்பெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

கொவிட் தொற்றுக் காரணமாக வீட்டில் ஒன்றுகூட முடியாமை இருப்பதனால் கிரியைகளை பார்வையிட விரும்புவோர் கிரியை நடைபெறும் நேரத்தில் லங்காசிறி இணையச் செயலியூடாக லைவ் வீடியோவாகப் பார்வையிட முடியும் என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றோம்.


தகவல்: குடும்பத்தினர்

'பகாஸ்தான்',
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

அங்கசன் 077 9398810, 021 2057504
துகிதா 00447804895456

## மரண அறிவித்தல்

தோற்றம் . 22 . 05 . 1932



மறைவு . 06 . 01 . 2021

### வேலுப்பிள்ளை செல்லத்துரை (V.V.S)

இராமால் வளவு, நீர்வேலி வடக்கை பிறப்பிடமாகவும் நீர்வேலி மேற்கு மாசிவனை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை செல்லத்துரை (06.01.2021) புதன்கிழமை அன்று காலமாகிவிட்டார்

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-இளையகுட்டி ஆகியோரின் அன்பு புதல்வனும், சுப்ரமணியம் - மனோன்மணி ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கந்தையா, அன்னப்பிள்ளை, பொன்னையா மற்றும் இராசரத்தினம் ஆகியோரின் அன்பு சகோதரனும், மணிமேகலை அவர்களின் அன்புக் கணவரும், குளோசினி (சுவிஸ்), கலைச்செல்வி (சுவிஸ்), நவகீதன் (சுவிஸ்), ஜீவகலா (கனடா) மற்றும் சத்தியசீலன் (இலங்கை) அவர்களின் பாசமிகு தந்தையும், சிவயோகநாதன், தற்பேரானந்தம், சிவகரன், எக்ஸ்பா மற்றும் உமாதேவி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சௌமியா சிந்துஜன், சினோயன், ஹரி, விக்டோரியா, இம்மனுவேல், திவீனா, சிவப்பிரியன், சிவானுஜன், சினோயா, தஸ்மிகன் மற்றும் தஸ்வந்தி ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2021) முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.